# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 பங்குனி 28 செவ்வாய்க்கிழமை (10-04-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:135


நாவாந்துறைப் படிப்பகம்

# அமைச்சர்கள், எம்.பிக்களுக்கு பணம் கொடுத்து அரசைக் கவிழ்க்க 5 வர்த்தக நிறுவனங்கள் சதி?

## 'பட்ஜெட்' வாக்கெடுப்பு சமயத்தில் ஆளும் தரப்புக்கு நெருக்கடி

கொழும்பு,ஏப்.10

ஐந்து முன்னணி வர்த்தக நிறுவனங்கள், அரசியல் சக்திகள் சிலவற்றுடன் இணைந்து அரசைக் கவிழ்ப்பதற்கு முயற்சி செய்து வருவதை புலனாய்வுப் பிரிவினர் கண்டுபிடித்திருப்பதாக அரச சார்புப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டிருக்கிறது.

அந்த ஐந்து வர்த்தக நிறுவனங்களில் ஒன்று எப்பொழுதும் ஐ.தே. கட்சிக்கு ஆதரவு வழங்கி வரும் நிறுவனம் என்றும் -

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் அரசியல் நடவடிக்கைகளுக்கு நிதி உதவி அளித்து வந்த அந்த நிறுவனம் தற்போது தனது பொதுசனத் தொடர்பு ஊடகங்களை ஐ.தே.கட்சியின் பிரசாரத்துக்காகப் பயன்படுத்தி வருவதாகவும் -

புலனாய்வு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஐ.தே.க. ஆட்சிக்காலத்தில் பெரும் தொகைப் பணத்தை வசூல் செய்த ஆயுத விற்பனை முகவர் ஒருவரின் தலைமையிலான மற்றொரு வர்த்தக நிறுவனமும் இதில் சம்பந்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐ.தே.க. அரசின் முன்னாள் அமைச்சராக இருந்த ஒருவரின் மகனுக்கும் அந்த வர்த்தக நிறுவனத்துக்கும் நெருக்கமான தொடர்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரபல சூதாட்ட நிறுவனம் ஒன்றும் வேறு இரண்டு கப்பல் நிறுவனங்களும் இந்தச் சதியில் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் புலனாய்வுகள் மூலம் கண்டறியப்பட்டதாகத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி ஐந்து நிறுவனங்களினதும் உரிமையாளர்கள் பல தடவைகள் சந்தித்து அரசுக்கு எதிரான சதித்திட்டம் குறித்துப் பேசி

(14ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் தடைநீக்க கோரிக்கை குறித்து அமைச்சர்களுடன் சந்திரிகா ஆராய்வு!

## திறந்த மனதுடன் பரிசீலிப்பதாக அரச உயர் வட்டாரங்கள் தகவல்

கொழும்பு,ஏப்ரல்10

**சமாதானப் பேச்சுக்களைத் தொடங்குவதற்கு முன்னர் தம்மீது விதிக்கப்பட்ட தடையை நீக்கவேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள கோரிக்கை குறித்து -**

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமக்கு நெருக்கமான மூத்த அமைச்சர்களுடன் நேற்றுக் கலந்தாலோசனை நடத்தினார்.**

**விடுதலைப் புலிகளின் கோரிக்கை குறித்து அரசாங்கம் திறந்த மனதுடன் ஆராய்ந்து வருகிறது - என்று வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கு மிக நெருங்கிய அரச உயர் அதிகாரி ஒருவர் கூறியதாக ஏ.பி. செய்தி நிறுவனம் நேற்றுத் தகவல் வெளியிட்டது.**

எனினும், நேற்று மாலை வரை அரசாங்கத் தரப்பிடமிருந்து திட்டவட்டமான பதில் எதுவும வெளியாகவில்லை என்று மற்றொரு செய்தி நிறுவனம் தெரிவித்தது.

விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையில் உண்மையான அக்கறை காட்டுவதாக உறுதிப்படுத்தினால் அவர்கள் மீதான தடையை நீக்குவது குறித்து பேச்சுவார்த்தை மேசையில் ஆராயலாம். ஆனால் முன்நிபந்தனை விதிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது - என்று மற்றொரு அரச வட்டாரம் கூறியதாக

(14ஆம் பக்கம் பார்க்க)

# இ.தொ.கா., முஸ்லிம் காங்கிரஸ் இன்று ஜனாதிபதியுடன் பேச்சு!

கொழும்பு,ஏப்.10

பொ.ஐ.முன்னணி அரசாங்கத்துக்கு ஆதரவளித்துவரும் இரு கட்சிகளான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன தமது கோரிக்கைகள் தொடர்பாக இன்று ஜனாதிபதியுடன் தனித்தனியாகப் பேச்சு நடத்த உள்ளன.

வரவு செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பு நாளை புதன்கிழமை நடைபெறவிருக்கும் சமயத்தில் இந்தப் பேச்சுக்கள் முக்கியத்துவம் பெறுவதாக அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

ஒலுவில துறைமுகம், கல்முனையை மையமாகக் கொண்ட கரையோர மாவட்டம், வடக்கு - கிழக்கு நிர்வாகத்தில் சிறுபான்மையோரின் பங்கு ஆகியன தொடர்பாக தமது கட்சி முன்வைத்த யோசனைகளை நிறைவேற்ற அரசு பின்னடித்து வருவது பற்றி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தும் என்று தெரிவிக்கப்படுகிறது.

(14ஆம் பக்கம் பார்க்க)

# நீர்கொழும்புச் சிறையில் காயமடைந்தோர் விவரம்

கொழும்பு,ஏப்.10

நீர்கொழும்புச் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருக்க முற்பட்ட சமயம் சிறைக்காவலர்களால் தாக்கப்பட்ட தமிழ்க் கைதிகளில் காயமடைந்த 15 பேரின் பெயர் விவரங்கள் வெளியாகி உள்ளன.

அவை வருமாறு:-

ஆ.பாஸ்கரலிங்கம், கே.கலதாஸ், கார்த்திகேசு சிவகிருஷ்ணன், சின்னக்குட்டி செல்வராஜா, சுப்பிரமணி வைத்தீஸ்வரன், மகாலிங்கம் மகிந்தன், தேவராஜா காந்தராஜா, பாலகிருஷ்ணன் டேவிற், ராஜசிங்கம் தினேஸ்குமார், சிவகுருதரன், கந்தசாமி ராஜகுமார், யோகநாதன் உதயகுமார், கந்தசாமி மணிமாறன், இராசையா கலைச்செல்வம், ஏ.எம் அஸ்வர் ஆகியோரே சிறைக்காவலர்களால் தாக்கப்பட்டு காயமடைந்தவர்கள் ஆவர்.

இதேவேளை -

நீர்கொழும்புச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகள் கொழும்பு விளக்க மறியல் சிறைச்சாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

(ஐ-6)

## மன்னார் பாலியல் வல்லுறவுச் சம்பவம்:

# இரு பெண்களும் பிணையில் விடுவிப்பு; பொலிஸாரைக் கைது செய்ய உத்தரவு!

மன்னார்,ஏப்.10

மன்னாரில் படையினரால் கைது செய்யப்பட்ட பின்பு பாலியல் வல்லுறவு மற்றும் பாலியல் ரீதியிலான கடும் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்ட இரு தமிழ் இளம் குடும்பப் பெண்களும் நேற்றுத் திங்கட்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் மன்னார் மாவட்ட நீதிபதி எம்.எச்.எம். அஜ்மீர் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு தலா பதினையாயிரம் ரூபா சரீரப்பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்தப் பெண்கள் மீது புரியப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள சித்திரவதைகள் தொடர்பாக பிரஸ்தாபப் பெண்கள் இருவரும் கடந்த 3ஆம் திகதி நீதிமன்றில் அளித்த சாட்சியத்தில் பெயர் குறிப்பிடப்பட்ட பொலீஸ் பொறுப்பதிகாரி இன்ஸ்

(14ஆம் பக்கம் பார்க்க)

# பல்கலை. மாணவர்கள் நேற்று கறுப்புப் பட்டி அணிந்து வந்தனர்

## இன்று பாடசாலைகளில் கறுப்புப் பட்டிப் போர்

யாழ்ப்பாணம்,ஏப்.10

மன்னாரில் தமிழ்ப் பெண்கள் இருவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட கொடூர சம்பவத்துக்கு கண்டனத்தையும் ஆட்சேபத்தையும் வெளிப்படுத்துவதற்காக யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று கறுப்புப் பட்டி அணிந்து விரிவுரைகளுக்குச் சமுகமளித்தனர்.

மன்னார் சம்பவத்தைக் கண்டித்து எழுதப்பட்ட சுலோகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் நேற்று பல்கலைக்கழக வளாகத்தில் காணப்பட்டன.

இளம்தாய்மார்கள் மீது இந்தக்

(14ஆம் பக்கம் பார்க்க)

## விமானப் பயணிகள் கவனத்துக்கு

யாழ்ப்பாணம்,ஏப்.10

பலாலி செல்லும் விமானப் பயணிகள் இன்று சிவில் நிர்வாக சேவை அலுவலகத்தில் இருந்தே அழைத்துச் செல்லப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வழமையாக விமானப் பயணிகள் ஒன்று கூடும் சிங்கள மகா வித்தியாலய மைதானத்தில் புத்தாண்டை ஒட்டிய நிகழ்ச்சிகள் நடைபெறுவதை அடுத்தே இன்று மட்டும் இந்த மாற்றம் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

# மட்டக்களப்பில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிப்பு

மட்டக்களப்பு,ஏப்.10

மன்னாரில் தமிழ்ப் பெண்கள் இருவர் மிக மோசமாகப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட சம்பவத்தைக் கண்டித்தும் -

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய படையினரைக் கைது செய்து நீதியின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரியும் - நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

வந்தாறுமூலை, வாழைச்சேனை, செங்கலடி ஆகிய பகுதிகளிலும் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களிலும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவித்தன.

இந்தப் பகுதிகளில் பாடசாலைகள், அரச, தனியார் நிறுவனங்கள் எவையும் இயங்கவில்லை.

போக்குவரத்து சேவைகளும்

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு. குமாரவேலு சரவணபவானந்தன் J.P.**
**(B.A. Dip. in. Edu, Dip- in - Agri.,Sp.Trd., S.L.P.S - I)**
(அதிபர், யா/வேலணை மேற்கு நடராஜ வித்தியாலயம், வேலணை)

வேலணை மேற்கு, நடராஜ வித்தியாலய அதிபரும் நயினாதீவு சனசமூக நிலையத்தின் தலைவரும் நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயில் மரபு வழி அறங்காவலரும் சமாதான நீதிவானுமாகிய திரு. கு. சரவணபவானந்தன் அவர்கள் இலங்கை அதிபர் சேவையின் தரம் I இற்கு பதவி உயர்வு பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவரது கல்வி, சமூக, சமயப் பணிகள் சிறக்கவும் நயினை நாகபூஷணி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

*நயினாதீவு சனசமூக நிலையம்,*
*நயினாதீவு.*

(86488)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08 | 11 |
| 11 | 03 |
| 1941 | 2001 |

### அமரர் ஆறுமுகம் மகாலிங்கம்

(வலி தெற்கு பிரதேச செயலர், இந்து சமயப்பேரவை உபதலைவர்)

எங்கள் குடும்பத்தலைவரும் பொதுச் சேவையாளருமாகிய அமரர் ஆறுமுகம் மகாலிங்கம் அவர்களின் சபிண்டீகரணமும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் 10.04.2001 இன்று முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வண்ணம் அமரரின் நண்பர்கள், உற்றார், உறவினர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

☆ இந்த அழைப்பினை தங்களிற்கு வழங்கப்பட்ட தனி அழைப்பாக கருதி அனைத்து நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்பாக வேண்டுகிறோம்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு,
திருநெல்வேலி.

மனைவி, மகள்

## Rotary Club of Jaffna

**"Mock" Interview and Talk on "Dos and Don'ts in an interview"**
**by**
**Rty. Dist. Governor Krish Rajendran.**
**on 29.04.2001**

You Will be interviewed by a team of high level executives if you apply for the vacancy advertised below:

### Management Consultants (Pvt) Ltd.

We have vacancies for Junior Executives in our establishment. We are looking For Young, energetic graduates. Those who are about to sit for the final examination also can apply. Working knowledge of English essential.

Apply with CV to the following address: C/o Rotary Club of Jaffna, Aruns Building, 347, Kasthuriar Road, Jaffna. Closing date 22.04.2001

(C/16209) *- Personnel Manager.*


புத்தாண்டை முன்னிட்டு

காவேரியில்

★ SALE ★

தொடரும் மலிவு விற்பனை

காவேரி சில்க்ஸ்

48. பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

13.04.2001 வரை மட்டுமே!

★ SALE ★

(C/16217)



நாகம்ஸ் சுன்னாகம்
அஜித், மீனா நடித்த
ஆனந்தப் பூங்காற்றே
(ரீலஸ்) தினசரி 11.00, 2.30 (புதியநேரம்)
(863493)



ராஜா யாழ்ப்பாணம்
கடைசி வாரம்
விஜயகாந்த், மீனா, பிரபுதேவா நடிப்பில்
வானத்தைப்போல
காட்சிகள்: 10.30, 2.30 (புதிய நேரம்)
நாளை (11.04.2001) முதல்
ரோஜாவனம்
(C/16006)



லஷ்சுமி இணுவில்
சரத்குமார், பிரபுதேவா, ஜெயாசீல், கபாலி, விவேக் நடிப்பில்
பெண்ணின் மனதைத்தொட்டு
(ரீலஸ்) காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)
(C/16210)


## பிரதி அமைச்சருக்குப் பிடிவிறாந்து

கொழும்பு,ஏப்.10

கொலை முயற்சி வழக்கு ஒன்று தொடர்பாக பிரதி விவசாய அமைச்சர் டி.எம்.திஸநாயக்க உட்பட மூவருக்கு ஆனைமடுவ மாவட்ட நீதி மன்றம் பிடிவிறாந்து பிறப்பித்துள்ளது.

ஸ்ரீ லங்கா ரெலிக்கொம் நிறுவன ஊழியரான ரி.அபய விக்கிரம என்பவரைக் கொலை செய்ய முயன்றதாக பிரதி விவசாய அமைச்சர் டி.எம்.திஸநாயக்க, அவரது செயலர் பிரியந்தராஜ கருணரத்ன, சரத் குமார சஞ்சீவ ஆகியோர் மீது குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

பல தவணைகளுக்கு சந்தேக நபர்கள் ஆஜராகாததை அடுத்து மூவருக்கும் பிடிவிறாந்தை நீதிவான் பத்திரான பாலிக்கார பிறப்பித்துள்ளார். (ஐ-3)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திருமிகு. சின்னத்துரை சிவகுமாரன்**
**(Maths Sp. Trd., S.L.P.S.2.1)**
(அதிபர்,யா/புன்னாலைக்கட்டுவன் அ.த.க.பாடசாலை)

அவர்கள் இலங்கை அதிபர் சேவையின் தரம் 2.1 இற்குப் பதவி யுயர்வு பெற்றமையினையிட்டுப் பாராட்டி வாழ்த்துவதோடு இவரது கல்விப் பணி மேன்மேலும் சிறக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*சக ஆசிரியர்கள். மாணவர்கள்.*
*யா/புன்னாலைக்கட்டுவன் அ. த. க. பாடசாலை.*

(86488)


MARUTHI

மாருதி ரெக்ஸ்



வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து றெடிமேட் ஆடைகளையும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

No.1, Bazzer Street, Jaffna.

(C/16212)





KANAKSI
T.P 2139

புதுவருடத்தை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ★ ஜப்பான் சூட்டிங் | - 375/= | - 250/= | ★ சேட்டிங் வகைகள் | - 400/= | - 275/= |
| ★ பட்டர் கலர் சேட் | - 300/= | - 250/= | ★ வொயில் சாறி | - 300/= | - 250/= |
| ★ T. சேட் | - 325/= | - 250/= | ★ 4 சாறி | | - 1000/= |
| ★ 1M பிரின்ட் துணி | | - 100/= | ★ 3 சாறி | | - 900/= |

மற்றும் பல விதமான சேட் வகைகள், சாறி, ஸ்கேட் அன் பிளவுஸ் என்பனவற்றை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

சோதி ரெக்ஸ்ரைல்ஸ்

இல.14,நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

(C/16215)

# உதயன்

## உரிமைகள் பலிக்கடாக்கள்!

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் இருந்து தமிழ் மக்கள் கொழும்புக்குச் செல்வதற்குத் தற்போது விதிக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகளைத் தளர்த்த முடியாது. அவ்வாறு தளர்த்தினால் விடுதலைப் புலிகள் கொழும்புக்குள் இலகுவில் ஊடுருவ வாய்ப்பாகிவிடும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த. அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணை மீது கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் விவாதம் நடைபெற்றது. அவ்வேளை, வடக்கு — கிழக்குப் பிரதேசங்களிலிருந்து கொழும்பு செல்வதற்கு உள்ள கட்டுப்பாடுகளை தளர்த்தவேண்டும் என்று தமிழ் எம்.பிக்கள் குரல் கொடுத்தனர்.

அதற்குப் பதிலளிக்கும் விதத்திலேயே கட்டுப்பாடுகளைத் தளர்த்த முடியாது என்று பிரதி அமைச்சர் சொன்னார். அதாவது பாதுகாப்புக் கருதித் தமிழர்களின் எந்த உரிமையையும் பறிக்கும் அதிகாரம் அரசாங்கத்துக்கு உண்டு என்பதனை மீண்டும் அடித்துக் கூறியிருக்கிறார்.

''பாதுகாப்புக் காரணம்'' என்ற முத்திரை குத்தப்பட்டு தமிழர்கள் பலவகைக் கட்டுப்பாடுகளுக்கும் இடர்களுக்கும் ஆளாககப்படுவது கடந்த பத்து ஆண்டு காலமாக நடைமுறையாகி வருகிறது. பாதுகாப்புப் படையினருக்கும், பொலீஸாருக்கும் அதீத அதிகாரங்கள் வழங்கப்பட்டதால் தமிழர்களை எதுவும் செய்யலாம் என்ற மனப்போக்கு அவர்களிடம் உறைந்து விட்டது. அதனால் பல சந்தர்ப்பங்களில் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் கூட ''பாதுகாப்புக் காரணம்'', ''சந்தேகத்தின் பேரில் கைது'' என்ற முத்திரைகள் கொண்டு பறிககபபடுகின்றன.

ஒருவர் தமது தேவை கருதி ஓர் இடத்துக்குச் செல்வதும், ஓர் இடத்தில் — தனக்கு வசதி எனக் கருதும் இடததில் — தங்குவதும் அவருக்குரிய அடிப்படை மனித உரிமை. அத்தகைய சுதந்திரமான போக்குவரத்து உரிமை தமிழ் மக்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது. தமிழர் ஒருவர் — அவர் தமிழர் என்பதால் — அவசர அலுவல் கருதி தாம் நினைத்த நேரத்தில் வேண்டிய இடத்துக்குச் செல்ல முடியாது. ஒரு நாட்டில் இருந்து இன்னொரு நாட்டுக்குச் செல்வதற்கு ''விஸா'' எடுப்பது போன்று ''எம். ஓ. டி. பெர்மிட்'' பெறவேண்டும். அதனை இரண்டொரு நாளில் பெற முடியாது.

பாதுகாப்புக் காரணம் கருதியே இவ்வாறெல்லாம் செய்ய வேண்டி உள்ளதாக அரசாங்கம் காரணம் கூறினாலும், தமிழர்கள் எல்லோருமே சந்தேகப் பேர்வழிகளாக்கப்பட்டுள்ளனர். பல்வேறு சந்தர்ப்பங்களிலும், இந்த நாட்டின் இரண்டாந்தரப் பிரசைகளாக்கப்படுவதற்கு மேலதிகமாக அவர்கள் சந்தேகப் பேர்வழிகளும் ஆக்கபபடுகின்றனர்.

அவசர காலச்சட்டம், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் ஆகிய இரண்டுமே தமிழர்களை இத்தகைய கீழ் நிலைக்குத் தள்ளி உள்ளன.

தென்னிலங்கைப் பிரதேசங்களின் — அங்கு வாழும் மக்களின் — பாதுகாப்புக்காக தமிழர்களின் அடிப்படை உரிமைகளும் சுதந்திரங்களும் பலிக்கடாக்கள் ஆக்கப்படுகின்றன. கொழும்பு போன்ற பிரதேசங்களின் பாதுகாப்பை உறுதி செய்யப்படவேண்டும் என்று நியாயப்படுத்தும் அரசாங்கம் தமிழர்களின் உரிமைகள் குறித்துக் கிஞ்சித்தும் அக்கறைப்பட அடியோடு மறுக்கிறது இதுதான் இலங்கையின் இனத்துவ சம உரிமை!

# விவசாய டிப்ளோமா பயிற்சிக்கு இங்கிருந்து 13 பேர் தெரிவு

யாழ்ப்பாணம், ஏப். 10

இலங்கை விவசாயக் கல்லூரிகளில் விவசாயத்தில் டிப்ளோமா கற்கை நெறி பயில்வதற்கு — 2001—2003 ஆண்டுக்கு — யாழ். மாவட்டத்தில் இருந்து 13 பேர் தெரிவு செய்யப்பட்டிருப்பதாக உதவி விவசாயப் பணிப்பாளர் ச. சின்னத்துரை அறிவித்துள்ளார்.

வவுனியா விவசாயக் கல்லூரியில் எதிர்வரும் 24 ஆம் திகதி இக் கற்கை நெறி ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும் —

இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டிருப்பதாகவும் —

வவுனியா விவசாயக் கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார்.

அனுமதி பெற்ற 13 மாணவரினதும் பெயர் விவரம் வருமாறு:-

★ எஸ். சுதர்சன் — சித்திர மேழி, இளவாலை.
★ எஸ். அகிலன் — 'நீலகிரி', கல்வயல், சாவகச்சேரி.
★ வை. கீதன் — 18/1, காட்டுக்கந்தோர் வீதி, சுண்டுக்குளி.
★ ஏ. காந்தயுபன் — பூனடி ஒழுங்கை, அரியாலை.
★ பி. இளமயூரன் — மஞ்சத்தடி தெற்கு, இணுவில்.
★ ஆர். செந்தூரன் — சுதுமலை தெற்கு, ஆனைக்கோட்டை.
★ கே. செல்வி — சப்பல் வீதி, யாழ்ப்பாணம்.
★ ஆர். தேன்மொழி — ஏழாலை மேற்கு.
★ ஆர். யாழினி — ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
★ வி. சுகன்யா — சுழிபுரம் மத்தி, சுழிபுரம்.
★ ஏ. தவச்செல்வி — பொற்பதி வீதி, கொக்குவில்.
★ கே. கிரிஜா — ஏ. வி. றோட், அரியாலை.
★ கே. மரியஜெனிற்றா — சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம். (ஐ)

## விளையாட்டு விழா

ஊர்காவற்றுறை, ஏப். 10

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் உள்ள இளைஞர் கழகங்களுக்கிடையிலான 'மெய்வன்மை விளையாட்டு விழா' நாளையும் நாளை மறுதினமும் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஊர்காவற்றுறை இளைஞர் கழகங்களின் பிரதேச சம்மேளனத் தலைவர் ஞா. செந்தமிழ்ச்செல்வன் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்திற்கு ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவர் ந. மதனராஜா பிரதம விருந்தினராகவும், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம், யாழ். இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் ரி. சிவதெட்சனாமூர்த்தி, ஊர்காவற்றுறை கோட்ட கல்வி அதிகாரி கே. இரத்தினசிங்கம், யாழ் மாவட்ட இளைஞர் சேவை அலுவலர் அ. சகதிவேல் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

(3-16-73)

**உதயவாக்கு**

நாவை அடக்கியவன் நன்கு விவாதிப்பவனை விட மேலானவன்.

## நாளை

பங்குனி 29

**புதன்கிழமை**

திதி: திருதியை காலை: 6.49 வரை.

சங்கடஹர சதுர்த்தி

நட்சத்திரம்: விசாகம் காலை 6.43 வரை.

சுபநேரம்: 4.36 — 6.06

ராகுகாலம்: 12.06—1.36

(பழைய நேரப்படி)

## தவறணையை மூடக்கோரி பெண்கள் திரண்டு மறியல்!

### நல்லூர்ப் பகுதியில் நேற்றுச் சம்பவம்

வலி. வடக்கு, ஏப். 10

கள்ளுத் தவறணையை மூடி விடுமாறு கோரி சுமார் 25க்கும் மேற்பட்ட பெண்கள் தவறணை முன்பாக நேற்று மறியலில் ஈடுபட்டனர்.

நல்லூர் கடுக்காயடி வீதியில் அமைந்துள்ள அரியாலை பனை தென்னைவள அபிவிருத்திச் சங்கத்தின் தவறணைக் கிளையையே மூடுமாறு பெண்கள் போராட்டம் நடத்தியுள்ளனர்.

போராட்டத்தை அடுத்து நண்பகல் அரியாலைப்பகுதி பொலீஸ் பொறுப்பதிகாரி இப்பகுதி கிராம அலுவலருடன் அங்கு சென்று மறியலில் ஈடுபட்ட பெண்களுடன் உரையாடி கள்ளுத்தவறணையை திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு தவறணையை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அவர் பொதுமக்களுக்கு ஆலோசனை வழங்கினார். அதனையடுத்து மறியலில் ஈடுபட்ட பெண்கள் கலைந்து சென்றனர். (ஐ-86)

## கைதடி கலைவாணி

## வித்தியாலயத்தைப் புனரமைக்க உதவி செய்யுமாறு கோரிக்கை

தென்மராட்சி, ஏப். 10

யுத்த நடவடிக்கைகளால் அழிந்துள்ள கைதடி கலைவாணி வித்தியாலயத்தை புனரமைப்பதற்கு வித்தியாலய அதிபர் பிரதேச பொதுமக்களின் உதவியை நாடியுள்ளார்.

இந்த வித்தியாலயம் கடந்த கால போர் நடவடிக்கைகளால் முற்று முழுதாக அழிந்து போயுள்ளது. அதனைப் புனரமைப்பதற்கு நிதி உதவி வழங்குமாறு — வெளிநாடுகளில் உள்ள — வித்தியாலய சுற்றாடலைச் சேர்ந்தவர்களிடமும், பழைய மாணவர்களிடமும் உதவி கோரி அதிபர் ப. செல்லத்துரை கடிதங்களை அனுபபியுள்ளதாகத் தெரிவிக்கபபட்டது.

வித்தியாலயத்தைப் புனரமைக்க சுமார் 10 லட்சம் ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது. (ம-117)

## துறைமுக அதிகார சபையில்

## வேலை பெற்றுத் தருவதாக பண மோசடி புரிந்தவர் கைது!

திருகோணமலை, ஏப். 10

துறைமுக அதிகார சபையில் வேலை பெற்றுத் தருவதாகப் பலரிடம் பண மோசடி புரிந்த திருகோணமலை துறைமுக ஊழியர் ஒருவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மறைந்த முன்னாள் அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப்பின் பெயரைப் பயன்படுத்தி மோசடியில் ஈடுபட்ட காமில் அருஸ் என்பவரே கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

துறைமுக அதிகார சபையில் முகாமைத்துவ உதவியாளர், லிகிதர், உதவியாளர், பாதுகாப்பு உத்தியோகத்தர், தட்டச்சாளர் போன்ற பதவிகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன எனத் தெரிவித்து அவற்றில் நியமனம் பெற்றுத் தருவதாகக் கூறி இவர் திருகோணமலை மாவட்டத்தில பலரிடம் பணம் பெற்றுள்ளார்.

ஒவ்வொருவரிடமும் 30ஆயிரம் முதல் 40 ஆயிரம் ரூபா வரையில் பணம் பெற்றுள்ள இந்த நபர் அமைச்சர் அஷ்ரபின் மறைவுக்குப் பின்னர் தலைமறைவாகிவிட்டாராம்.

அதைத் தொடர்ந்து சந்தேகம் கொண்டவர்கள் செய்த முறைப்பாட்டின் பேரில் பிரஸ்தாப நபர் கொழும்பில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலைக்குக் கொண்டு வரப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட பிரஸ்தாப நபரை எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்க மறியலில வைக்கும்படி உத்தர விடப்பட்டுள்ளது.

(ஐ-3)

## கல்வி உபகரணங்கள் அன்பளிபபு

சண்டிலிப்பாய், ஏப். 10

பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தொழில் செய்யும் போது மரணமடைந்த மற்றும் அங்கவீனமடைந்த, சங்க உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு கல்வி சார் உபகரணங்களை அண்மையில் அன்பளிப்புச் செய்துள்ளது.

13 சங்க உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு அப்பியாசக் கொப்பி மற்றும்கல்விசார் உபகரணங்கள் சங்கத் தலைமை அலுவலகத்தில் வைத்துவழங்கப்பட்டதாக சங்கப் பொது முகாமையாளர் கி. குணரத்தினம் தெரிவித்தார்.

(ஐ-53)

## இளைஞர் சம்மேளனம் அங்குரார்ப்பணம்

வலி. தென்மேற்கு, ஏப். 10

சண்டிலிப்பாய்ப் பிரதேச இளைஞர் சம்மேளன அங்குரார்ப்பணக் கூட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிரதேச இளைஞர் சேவை அதிகாரி செ. கோகிலராஜா தலைமையில் இடம்பெற்றது.

கூட்டத்தில் பிரதேச சம்மேளனத் தலைவராகச் சந்திரலிங்கம் தயாளன் தெரிவு செய்யப்பட்டார்.

(ம-185)

## பொதுச் சந்தை சட்டடப் பணிகள் பூர்த்தி

மாதகல் கிராமத்தில் நிறுவப்பட்ட, பொதுச் சந்தையின் கட்டட வேலைகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன. வலி. தென்மேற்குப் பிரதேச சபை ஒதுக்கீடு செய்த நிதியைக் கொண்டு இச் சந்தைக் கட்டடம் நிறுவப்பட்டுள்ளது.

சந்தைக்கட்டடத்தை நிறுவுவதற்கான காணி, மாதகலைச் சேர்ந்த ஒருவரால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. விரைவில் இச்சந்தைக் கட்டடம் திறந்து வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ம-135)

## சமய சந்நிதிகளில்

உடுவில் மல்வம் கந்தசுவாமி ஞானவைரவர் கோயில் வருடாந்தப் பொங்கல் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை நடைபெற உள்ளது. பிற்பகல் இரண்டு மணிக்கு விசேட பூசையுடன் பொங்கல் வழிபாடுகள் நடைபெறும்.

(ம-152)

★ ★ ★

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோயில் மணவாளக்கோல சங்காபிஷேகம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் நடைபெறவுள்ளது. வருடாந்த மகாசங்காபிஷேகம் எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் நடைபெறவுள்ளது சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து சுவாமி வீதியுலா வருதலும் ஸ்ரீமுருகன் அன்னதானச் சபையினரின் அன்னதானம் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும். (ம-28)

★ ★ ★

பெரியவிளான் வடசேரி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது. தொடர்ந்து 12 தினங்கள் மண்டலாபிஷேகமும் நடைபெறும்.

இப் பகுதியில் கடந்த 1992 ஆம் ஆண்டில் நிகழ்ந்த போர் அனர்த்தங்கள், இடம்பெயர்வு ஆகியவற்றால் கடந்த ஒன்பது வருடகாலமாக இவ் ஆலயத்தில் வருடாந்த உற்சவம் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கும்பாபிஷேகத்தை அடுத்து இம்மாத இறுதியில் வருடாந்த மஹோற்சவம் ஆரம்பமாகவுள்ளது. (ம-15-5)

★ ★ ★

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான ஸ்ரீ சுதர்ஷனசக்கர வழிபாடு எதிர்வரும் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிமுதல் நடைபெறவுள்ளது. (3-5)

★ ★ ★

வண்ணை கலட்டி அருள்மிகு ஸ்ரீகற்பக விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

புதுவருடதினத்தன்றுதேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்த உற்சவமும் இடம்பெறவிருக்கின்றன.

மஹோற்சவ காலத்தில் தினமும் பிற்பகல் 4 மணிக்கு கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா 'மகாபாரதம்' பற்றி தொடர் சொற்பொழிவு நிகழ்த்திவருகின்றார். (-3)

★ ★ ★

கைதடி வீரகத்திப்பிள்ளையார் ஆலயத்தில் நித்திய நைமித்திய பூசைகளை ஆரம்பிக்க வசதியாக இன்றும் நாளையும் ஆலயத்தில் பிராயச்சித்த அபிஷேகம் இடம்பெறவுள்ளது. நாளை பகல் மகேசுரபூசையும் இடம்பெறும்

# தெற்குப் பல்கலைக்கழகங்களில்

# அமைதியற்ற, நெருக்கடி நிலை

## றுகுணு மாணவர்களை அச்சுறுத்திவரும் ஆயுதக் குழுக்கள்

கொழும்பு, ஏப். 10
மாணவர்கள் பல பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் இன்றைய சூழ்நிலையில் தென்னிலங்கையின் பல்கலைக்கழகங்களில் அமைதியற்றபயங்கர நெருக்கடிநிலை தோன்றி இருப்பதாகச்செய்திகள் தெரிவிக்கின்றன.

மாணவர் சங்கச் செயற்பாடுகளில் அவர்கள் ஈடுபட்டால் கொலை செய்யப்படுவார்கள் என்னும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வரும் அதேவேளை, றுகுணு பல்கலைக்கழக மாணவர்களை வேட்டையாடும் நோக்குடன் ஆயுதக்குழு ஒன்றும் செயற்பட்டு வருகிறது என்றும் புகார் கூறப்படுகிறது.

இதேவேளை —

'கடந்த புதன்கிழமை மாத்தறை நகரில் தீவிர செயற்பாடுள்ள மாணவர்களை நோட்டம் விட்டபடி இரண்டு குழுக்கள் ஆயுதங்கள் சகிதம் இரண்டு வாகனங்களில் சுற்றித்திருந்தன பல்கலைக்கழக விடுதிக்கு வெளியே தங்கும் மாணவர்கள் பற்றிய விவரங்கள் அவர்களால் சேகரிக்கப்பட்டன.' என்று மாணவர் சங்கத் தலைவர் ரவீந்திர முதலிகே தெரிவித்தார்.

''கடந்த மார்ச் 26 ஆம் திகதி பல்கலைக்கழக வாயிலில் வைத்தும், அருகிலுள்ள பஸ் நிலையத்தில் வைத்தும் மாணவர் தலைவர்கள் அரச சார்பு மாணவர் குழுக்களாலும், ஆயுதபாணியான வெளியாராலும் தாக்கப்பட்டுள்ளனர். மாணவர் சங்கத்திற்கு ஆதரவுதரக்கூடாது என்று அச்சுறுத்தப்பட்டு அவர்கள் தாக்கப்பட்டனர்'' என்றும் அவர் கூறினார்

''பல்கலைக்கழகத்தைப் பாதுகாப்போர் சங்கம்'' என்னும் கடிதத் தலைப்பில் கொலைப் பயமுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றன என்றும், மாணவர்கள் அச்சத்தினால் நூல் நிலைய மண்டபங்களில் தங்கி வாசிப்பதில்லை, எனவும், தமக்கு பாதுகாப்பு இல்லை என்பதை உணர்ந்து அவர்கள் முன்னதாகவே வளாகத்திலிருந்து வெளியேறிவிடுகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதுபோன்ற மிரட்டல் கடிதங்கள் ஸ்ரீ ஜயவர்த்தனபுர, களனி, சுதேச மருத்துவ நிலையம் ஆகியவற்றின் மாணவர்களுக்கும் கிடைத்திருப்பதாக அனைத்து பல்கலைக்கழகங்களினதும் மாணவர் ஒன்றிய அழைப்பாளர் சமீரா கொஸ்வத்தை தெரிவித்தார்.

இதேவேளை—

றுகுணு பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் நியமிக்கப்பட்ட உபவேந்தர் பேராசிரியர் ரஞ்சித் சேனாரத்ன, தான் இரு மாணவர் சங்கங்களினதும் பிரதிநிதிகளை அழைத்து அறிவுரைகளை வழங்கியுள்ளதாகவும், தற்காலிகமாக பொலிஸ் நிலையம் ஒன்று வளாகத்தின் வாசலில் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

(க)

# கண்ணீர் அஞ்சலி

எமது நண்பன்
சுபாஸ்கரனின் அன்புத் தந்தையார்

## க. நாகராசா

அவர்கள் அகால மரணம் அடைந்த செய்தி கேட்டு கவலையடைகின்றோம். அதனால் துயருற்று இருக்கும் அன்னாரது குடும்பத்தாருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்து, அமரருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நியூ சோதி நகையகம்,
செனித் மல்றி ஸ்பொட்
ஸ்தாபனத்தாரும், நண்பர்களும்.

Dr. சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம். (86451)

கைதடி கயற்றசிட்டி

# அருள்மிகு
# கந்தசுவாமி தேவஸ்தானம்

இடம் பெயர்வினால் இடைநிறுத்தப்பட்டிருந்த இந்த ஆலயத்தின் பூஜை ஆராதனை, மீண்டும் நாளை (11 -- 04 -- 2001) புதன்கிழமை காலை 7.00 மணிக்கு ஆரம்பிக்க முருகன் அருள் பாலித்துள்ளார்.

பூஜைகளை பிரம்மஸ்ரீ மு. ஐயாத்துரை குருக்கள் நடத்தி வைப்பாரென முருகன் அடியார்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

பரிபாலன சபையினர்.

(86465)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



நாற்பத்தொன்பதாவது பிறந்த நாளைக் கொண்டாடும்
எமது அதிபர்

## திரு. சி. பஞ்சாட்சரம்

(Pri. Trd, S. L. P. S. 2 - 1)

அவர்கள் இலங்கை அதிபர் சேவை தரம் 2 - 1 இற்குப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு நாம் உளமாரப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/உடுவில் மல்வத்தை
றோ.க.த.க. பாடசாலை. (86397)

## பளை மாணவருக்கு

யாழ்ப்பாணம், ஏப். 10
பளை மத்திய கல்லூரியில் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் கொடுப்பனவைப் பெறுரிமாணவர்களை இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு புலோலி றோ க. த. கலவன் பாடசாலைக்கு வரும்படி கல்லூரியின் அதிபர் க. குணபலசிங்கம் கேட்டுள்ளார். (ஐ-3)

## கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 10
மூளாய் வதிரன்புலோ ஸ்ரீ முத்துக்குமார சுவாமி தேவஸ்தான வருடாந்த மகோற்சவத்தில் 11 தினங்களும் தொடர்ந்து ''கப்பராமாயணம்'' பற்றி தொடர் சொற்பொழிவாற்றிய பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மாவைப் பாராட்டி தர்மகர்த்தா சார்பில் ஆலய மஹோற்சவ குரு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். (க)

## தென்மராட்சி வலய முகாமைத்துவ உதவியாளர்களுக்கு

தென்மராட்சி, ஏப். 10
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றி வருகின்ற அனைவரையும் நாளை புதன்கிழமை காலை 9.00 மணிக்கு நெல்லியடியில் இயங்கும் வலயக் கல்வி அலுவலகத்திற்கு வருகை தருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார்.

(ம-117)

# கசிப்பு உற்பத்தி செய்வோரின் நிவாரணத்தை நிறுத்த வேண்டும்

## யாழ். பிரதேச செயலரிடம் கோரிக்கை

கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபடுவோருக்கு வழங்கப்படும் உலர் உணவு நிவாரணத்தை யாழ். பிரதேச செயலர் உடன் நிறுத்த வேண்டும்.

— இவ்வாறு குருநகர் சென். ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக்கழக ஏற்பாட்டில் கசிப்பு ஒழிப்புத் தொடர்பாக கடந்த 7 ஆம் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

குருநகர் புனித கார்மேல் அன்னை மண்டபத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்டத்திலுள்ள பல பொது அமைப்புகள் கலந்து கொண்டன.

கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய தீர்மானங்கள் வருமாறு:-

★ குருநகரில் இயங்கி வரும் சனசமூக நிலையங்கள் ஊடாக குருநகரில் கசிப்பு விற்பனை செய்பவர்களின் விவரங்களைத் திரட்டுதல்.

★ கசிப்பு உற்பத்தி, விற்பனையில் ஈடுபடுவோருக்கு உலர் உணவு வழங்கப்படும் பட்சத்தில் அவற்றை உடன் நிறுத்துமாறு யாழ். பிரதேச செயலரைக் கோருவது.

★ இத்தகைய சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவோரைச் சமூகத்தில் இருந்து தனிமைப் படுத்துதல்; அவர்களது வீடுகளில் நடைபெறும் சுக துக்க நிகழ்வுகளில் கலந்து கொள்ளாமல் விடுதல்

★ கசிப்பினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தல் ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதேவேளை —

கசிப்பு விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களை எதிர்வரும் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று மக்களிடையே விநியோகிக்க இருப்பதாக சென் ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகத் தலைவர் சீ. எம். நெல்சன் தெரிவித்தார்.

(ம-51)

# படையினரின் குடும்பங்களுக்கு குடியிருப்பு வசதி செய்துதரப்படும்

## ஹொரணை நிகழ்வில் ராணுவத் தளபதி

யாழ்ப்பாணம், ஏப். 10
குடியிருப்பதற்கு காணிகள் அற்ற படையினரின் குடும்பங்களுக்குவெற்றுக்காணியை வழங்கி குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல தெரிவித்தார்.

ஹொரணைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள 'ரணவிரு' கிராமத்தைக் கடந்த வாரம்சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்து உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது -

80 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்த 50 வீடுகளும் யுத்த நடவடிக்கைகளின் போது உயிரிழந்த மற்றும் அங்கவீனமடைந்த படையினரின் குடும்பங்களுக்கு வழங்கப்படுகின்றன.

இவ்வாறே இராணுவ வீரர்களின் குடும்பங்கள் பல குடியிருக்க காணிகள் இன்றி அவதிப்படுகின்றனர். அவர்கள் குடியிருப்பதற்காக 2 ஆயிரம் ஏக்கர் காணியை வழங்க தீர்மானித்துள்ளோம்.

இந்த 2 ஆயிரம் ஏக்கர், காணிகள் அற்ற படையினரின் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும்.

நாட்டின் சமாதானத்திற்காகவும் சுபீட்சத்திற்காகவும் மேற்கொள்ளப்பட்டுவரும் இராணுவ முயற்சிகளுக்கு அனைவரும் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (க)

# மரண அறிவித்தல்

## திருமதி ஆசைப்பிள்ளை இராசம்மா

நிகரை வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகக் கொண்ட, திருமதி ஆசைப்பிள்ளை இராசம்மா அவர்கள் நேற்று (09—04—2001) திங்கட்கிழமை காலை இறைபதம் எய்தியுள்ளார்.

அன்னார் சங்கானை நிகரை வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆசைப்பிள்ளையின் அன்பு மனைவியும், அன்னமுத்துவின் சகோதரியும், ஞானசேகரம் (அவுஸ்திரேலியா, ஞானம் ஆட்ஸ் அன் அட்வடைசிங்), மகாலக்ஷ்மி (கொழும்பு), சுந்தரமூர்த்தி (ஆசைப்பிள்ளை அன்சன் கொமினிக்கேசன். சங்கானை), ஜெயலக்ஷ்மி, பத்மநாதன் (நீர்ப்பாசன இலாகா. திருகோணமலை), ஜெகதீசன் (சீனோர்), சந்திரசேகரம் (ஜேர்மனி), குணசேகரம் (ஆசைப்பிள்ளை அன்சன் நகைத்தொழிலகம், சங்கானை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ருக்மணி (அவுஸ்திரேலியா), கனகலிங்கம் (ஈரோஸ் தியேட்டர் முகாமையாளர், கொழும்பு), தங்கராணி, சிவகுருநாதன் (சிவகுருநாதன் நகையகம், கல்வியங்காடு), மல்லிகாதேவி (திருகோணமலை), கமலாதேவி, ஜெயராணி (ஜேர்மனி), திலகராணி (சோபனா) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஸ்ரீரங்கன் (அவுஸ்திரேலியா). வனிதா (ஜேர்மனி), மணிவண்ணன் (சுவிஸ்), சுபாஜினி(ஜேர்மனி). சங்கீதா, பிரதீபன், கீர்த்திராஜ், சுரேகா, தர்சினி, கிருபரன், கார்த்திகா, அஜித்குமார், செந்தூரன், அனுசியா(ஜேர்மனி), கிரிசாந், கோபிகா, பிரியங்கா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் இன்று (10—04—2001) செவ்வாய்க்கிழமை காலை 10 00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சங்கானை கரச்சி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஆ. சுந்தரமூர்த்தி
(மகன்)

''திருமகள் வாசம்''
சங்கானை. (86473)

# யாழ். மக்களின் மனிதாபிமானப் பணிக்காக ஐரோப்பிய ஒன்றியம் ரூ.91/2 கோடி நிதியுதவி

கொழும்பு,ஏப்.10

யாழ்.மாவட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவியாக ஐரோப்பிய ஒன்றியப் பொருளாதார ஆணைக்குழு 9 கோடியே 40 இலட்சம் ரூபாவை வழங்க உள்ளது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, பட்டினிக்கு எதிரான இயக்கம் ஆகிய அமைப்புக்கள் ஊடாக இந்த உதவி வழங்கப்படவிருக்கின்றது.

யாழ்ப்பாண மக்களுக்குத் தேவையான மனிதாபிமான உதவிப பொருளகளைக் கப்பல் மூலம் எடுததுவரவும் நோயாளர்களை மேலதிக சிகிச்சைக்காகக் கொழும்புக்குக் கூட்டிச்செல்வதற்கு போக்குவரத்து வசதிகளை வழங்கவும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுக்கு இந்த நிதியில் ஒரு பகுதி வழங்கப்படும்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு சுகாதார, குடிதண்ணீர் வசதிகளை வழங்கவும் உணவுப் பாதுகாப்பு மற்றும் விவசாய உற்பத்திப் பணிகளுக்காக பட்டினிக்கு எதிரான இயக்கத்துக்கு ஒரு பகுதி நிதியும் வழங்கப் படும்- என்று தெரிவிக்கப் பட்டது. (ஐ-3)

# லண்டன் செல்லமுயன்ற தமிழர் கட்டுநாயக்காவில் கைது

கொழும்பு,ஏப்.10

போலி 'வீஸா' மற்றும் ஆவணங்களுடன் லண்டன் செல்ல முயன்றதாகக் கூறப்படும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் கடந்த சனிக்கிழமையன்று கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

சிவசங்கரன் ஸ்ரீநாதன் என்ற குடும்பஸ்தரே கைது செய்யப்பட்டுள்ளவர் ஆவார்.

போலி 'வீஸா' மூலம் நாட்டைவிட்டு வெளியேற முயன்றார் என்ற குற்றச்சாட்டின் கீழ் இவர் கைது செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம)

## நீர்கொழும்பு சிறைச்சாலையில் இருந்து

# 28 தமிழ்ப் பெண் கைதிகள் வெலிக்கடைக்கு இடமாற்றம்

கொழும்பு,ஏப்.10

குடிவரவு, குடியகல்வுச் சட்டத்தின் கீழ் நீர்கொழும்புச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 28 தமிழ்ப் பெண் கைதிகள் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை திடீரென வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை நீர்கொழும்பு சிறையில் ஆண் தமிழ்க் கைதிகள் சிறைக்காவலர்களால் மிக மோசமாகத் தாக்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்தே இந்த இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (ம)

# 2ஆயிரம் ரூபா கொடுப்பனவு இதுவரை இல்லை

தென்மராட்சி,ஏப்.10

இடம்பெயர்ந்த மக்களுக்கு உடனடி நிவாரணமாக வழங்கப்பட வேண்டிய 2ஆயிரம் ரூபா கொடுப்பனவு பச்சிலைப்பள்ளி, தென்மராட்சி ஆகிய பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்து ஒரு வருடமாகியும் பல குடும்பங்களுக்கு வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கொடுப்பனவைப்பெற பிரதேச செயலகங்கள், யாழ்.செயலகம், வங்கி என்று அலைந்து திரிந்தும் இதுவரை கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (க-117)

# ஊரடங்கு வேளையில் வீதிகளில் கண்டபடி நடமாடித் திரியாதீர்!

## பொலீஸ் பொறுப்பதிகாரி அறிவுறுத்து

தென்மராட்சி,ஏப்.10

ஆலய உற்சவ நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் பொதுமக்கள் ஊரடங்கு வேளையில் வீதிகளில் நடமாடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு நெல்லியடி பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி எச்.ஏ.தகம்பத் அறிவுறுத்தியுள்ளார்.

இப் பகுதியில் இடம்பெறும் திருட்டுக்களைத் தடுப்பதற்காக பொலீஸார் இரவு வேளையில் ரோந்து சேவையில் ஈடுபடுவதால் பொது மக்களை அசௌகரியங்கள் ஏற்படாத வகையில் நடந்து கொள்ளுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த வாரம் இரவு ரோந்துப் பணியில் ஈடுபட்ட பொலீஸார் நள்ளிரவு வேளையில் சைக்கிள்களில் வந்த ஐந்து இளைஞர்களைப் பிடித்து விசாரணை செய்தனர். அவர்கள் ஆலய உற்சவம் ஒன்றுக்குச் சென்று விட்டு வீட்டுக்குச் செல்வதாகக் கூறியதால் விடுவிக்கப்பட்டனர். எனினும் ஊரடஙகு வேளையில் வீதியில் நடமாடுவது சட்டத்தை மீறும் செயல் என்றும் அவர் குறிப்பிட்டார். (க-117)

# பகைவரையும் மன்னிப்போம்

## 42ஆம் நாள்

## தவக்காலச் சிந்தனை

உங்கள் பகைவரிடம் அன்பு கூருங்கள். உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள் (மத்.5-44). இறைமகன் யேசு பகைவரை அன்பு செய்தார். இறக்கும் தறுவாயில்கூட தவறு செய்தவர்களை மன்னிக்கும்படி தந்தையிடம் கூறினார்.

நாமோ இன்று கைமாறு கருதுகின்ற அன்பையே மற்றவரிடம் செலுத்துகின்றோம். எம்மை யார் அன்பு செய்கிறார்களோ அவர்களையே நாமும் அன்பு செய்கிறோம். அதைவிடுத்து எம்முடன் யார் பகையாக உள்ளார்களோ அவர்களை நாம் தேடிச் சென்று அன்பு செய்ய வேண்டும். இறைமைந்தனும் இதைத்தான் நம்மிடம் எதிர்பார்க்கிறார்.

இன்றைய உலகில் அகதியாக, அநாதையாக, ஏழையாக, ஆதரவற்றவனாக வாழுவோரை அன்பு செய்கிறாயா? அவர்களை அன்பு செய்தால் எமது ஆணவம், அகங்காரம், தரம் குறைந்துவிடும் என்று பல தடவைகளில் நினைத்திருக்கிறோம்.

நாம் அன்பு செய்யும்போது இன, மத, மொழி வேறுபாடு எம் மனக்கண் முன் தோன்றக்கூடாது. இறைமைந்தன் பாகுபாடு காட்டிய அன்பு செய்தார். இன்று எம்மத்தியில் எத்தனை வேறுபாடுகள், எத்தனை பிளவுகள்?

பிளவுகளைக் களைந்து பகைவரையும் ஏற்று உண்மையாகவே உள்ளத்தின் ஆழத்தில் இருந்துவரும் தூய்மையான அன்பாக மலர்ந்து எமது பகைவரையும் மன்னித்து போலி அன்பு செலுத்தாது வாழ இத்தவக்காலத்தில் முயற்சிப்போம்.

**செல்வி கௌரி செல்வராசா**
*அச்சுவேலி.*

# சாவகச்சேரி நிலைமை குறித்து அறிந்திராத தொழில் திணைக்களம்!

தென்மராட்சி,ஏப்.10

சாவகச்சேரிப் பகுதி வர்த்தக நிலையங்கள் யுத்தம் காரணமாக பூட்டப்பட்டுள்ளதை அறியாத கொழும்பு தொழில் ஆணையாளர் அலுவலகம் சாவகச்சேரி வர்த்தக நிலையங்களில் கடமையாற்றும் ஊழியர்களின் சேமலாபநிதி அனுப்பப்படவில்லை எனவும், உடனடியாக அவற்றை அனுப்பி வைக்குமாறும் வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்குக் கடிதம் அனுப்பியுள்ளது.

'வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு ஒரு வருடமாகி கைவிட்டு வந்த வியாபாரப் பொருள்கள் எதுவும் மீட்கப்படாத நிலையில் நிர்க்கதிக்கு உள்ளாகியுள்ள வர்த்தகர்கள் தொழில் திணைக்களத்தின் இக்கடிதம் குறித்து ஆச்சரியம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இடமபெயர்வினால் சாவகச்சேரிப் பகுதியில் உள்ள 389 வர்த்தக நிலையங்களில் கடமையாற்றிய ஆயிரத்து 202 ஊழியர்கள் கடந்த ஒருவருடமாக வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டதால் தொழில்கள் இழந்துள்ளதாக வணிகர் மன்றப் புள்ளி விவரங்கள் மூலம் தெரிய வருகிறது. (க-117)

# ஆசிரியர் சம்பளம்

யாழ்ப்பாணம்,ஏப்.10

தென்மராட்சிக் கல்வி வலயத்தின் பாடசாலை அதிபர்கள், தங்கள் பாடசாலை ஆசிரியர்களின் ஏப்ரல் மாத சம்பளப் பட்டியல்களை வலயக் கல்வி அலுவலகத்தின் நிதிக் கிளையில இன்று செவ்வாய்க்கிழமை வந்து பெற்றுக்கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (க)

# பங்குனித் திங்களான நேற்று சுட்டிபுரத்தில் பக்தர் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.10

பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவத்தின் இறுதித் திங்களான நேற்று வரணி சுட்டிபுரம் கண்ணகை அம்பாள் ஆலயத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் முக்கியத்துவம் பெற்ற பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம் தற்போதைய சூழ்நிலை காரணமாக பிரபல்யம்மிக்க அம்பாள் ஆலயங்களுக்கு மக்கள் செல்ல முடியாததால் சுட்டிபுரம் அம்பாள் ஆலயத்தில் தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர்.

பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவத்துக்கு பெயர் பெற்ற மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி அம்பாள் ஆலயம், நுணாவில் குளம் கண்ணகை அம்பாள் ஆலயம், கச்சாய் அம்மன் கோயில், பளை இரட்டைக்கேணி அம்பாள் ஆலயம், நவுணவெளி அம்பாள் ஆலயம், அல்லிப்பளை அறத்தி அம்பாள் ஆலயம் உட்பட பல ஆலயங்களில் பொங்கல் உற்சவம் சிறப்பாக நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (க-117)

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்.மாவட்டத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்வதற்கு விண்ணப்பித்தவர்களில் இம்மாதம் 7ஆம் தகதி வரை அனுமதி வழங்கப்பட்டோர் விவரம் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:

## சாவகச்சேரி

(182494ஏ) (182520ஏ) (182520பி)
(183560ஏ) (183560பி) (183688ஏ)
(183867ஏ) (185496ஏ) (185496பி)
(185496சி) (182494பி)

## யாழ்ப்பாணம்

(171034ஏ) (171475ஏ)

## கரவெட்டி

(160267ஏ) (160267பி) (160267சி)
(162361ஏ) (162361பீ) (162361சி)
(164878ஏ) (164878பி) (164878சி)
(164878டி) (167243ஏ) (167243பி)
(167243சி) (167243டி) (169566ஏ)
(169714ஏ) (172276ஏ) (172276பி)
(172276சி) (172388ஏ) (172388பி)
(172394ஏ) (172394பி) (172509ஏ)
(172611ஏ) (176114ஏ) (176255ஏ)
(176348ஏ) (177752ஏ) (177783ஏ)
(180389ஏ) (180389பி) (180502ஏ)
(180502பி) (180502சி) (180502டி)
(181089ஏ) (181365ஏ) (181365பி)
(181365சி) (181365டி) (181365ஈ)
(181367ஏ) (181367பி) (181367சி)
(182272ஏ) (182274ஏ) (182274பி)
(182375ஏ) (182375பி) (182382ஏ)
(182414ஏ) (182440ஏ) (182440பி)
(182500ஏ) (182500பி) (182538ஏ)
(182555ஏ) (182555பி) (182555சி)
(182556ஏ) (182556பி) (182556சி)
(182572ஏ) (182572பி) (183545ஏ)
(183547ஏ) (183582ஈ) (183582ஏ)
(183582பி) (183582சி) (183582டி)
(183601ஏ) (183603ஏ) (183603பி)
(183606ஏ) (183606பி) (183616ஏ)
(183621ஏ) (183621பி) (183621சி)
(183628ஏ) (183630ஏ) (183630பி)
(183663ஏ) (183663பி) (183674ஏ)
(183674பி) (183674சி) (183674டி)
(183694ஏ) (183694பி) (183700ஏ)
(183704ஏ) (183712ஏ) (183712பி)
(183712சி) (183713ஏ) (183719ஏ)
(183734ஏ) (183737ஏ) (183777ஏ)
(183787ஏ) (183787பி) (183787சி)
(183787டி) (183787ஈ) (183810ஏ)
(183810பி) (183815ஏ) (183815பி)
(183815சி) (183815டி) (183815ஈ)
(183828ஏ) (183828பி) (183829ஏ)
(183829பி) (183837ஏ) (183838ஏ)
(183838பி) (183838சி) (183838டி)
(183838ஈ) (183850ஏ) (183850பி)
(183877ஏ) (183879ஏ) (183881ஏ)
(183884ஏ) (183885ஏ) (183887ஏ)
(183897ஏ) (183897பி) (183905ஏ)
(183907ஏ) (183907பி) (183907சி)
(183912ஏ) (183931ஏ) (183959ஏ)
(183959பி) (183966ஏ) (183972ஏ)
(183972பி) (183999ஏ) (184011ஏ)
(184011பி) (184013ஏ) (184017ஏ)
(184017பி) (185336ஏ) (185336பி)
(185337ஏ) (185337பி) (185338ஏ)
(185339ஏ) (185339பி) (185345ஏ)
(185346ஏ) (185366ஏ) (185366பி)
(185380ஏ) (185380பி) (185393ஏ)
(185405ஏ) (185456ஏ) (185474ஏ)
(185474பி) (185545ஏ) (185545பி)
(185554ஏ) (185580ஏ) (185707ஏ)
(185778ஏ) (185778பி) (185790ஏ)
(185790பி) (185790சி) (188166ஏ)
(188166பி) (188195ஏ) (188196ஏ)
(188196பி) (188277ஏ) (188280ஏ)
(188310ஏ) (188330ஏ) (188330பி)
(188332ஏ) (188332பி) (188350ஏ)
(188350பி) (188350சி) (188350டி)
(188418ஏ) (188429ஏ) (188429பி)
(188429சி) (188429டி) (189808ஏ)
(189809ஏ) (189812ஏ)

## கோப்பாய்

(162673ஏ) (162673பி) (173270ஏ)
(173552ஏ) (173552பி) (179646ஏ)
(180686ஏ) (180686பி) (180762ஏ)
(180762பி) (180799ஏ) (180922ஏ)
(180961ஏ) (180974ஏ) (180974பி)
(180991ஏ) (180991பி) (181048ஏ)
(181049ஏ) (181049பி) (182101ஏ)
(182937ஏ) (182937பி) (182962ஏ)
(182962பி) (182988ஏ) (182988பி)
(182994ஏ) (182994பி) (182994சி)
(182994டி) (182994ஈ) (183006ஏ)
(183006பி) (183011ஏ) (184116ஏ)
(184116பி) (184116சி) (184233ஏ)
(184260ஏ) (184260பி) (184260சி)
(184287ஏ) (184287பி) (184294ஏ)
(186328ஏ) (186328பி) (186336ஏ)
(186336பி) (186338ஏ) (186370ஏ)
(186370பி) (186381ஏ) (186381பி)
(186381சி) (186390ஏ) (186394ஏ)
(186399ஏ) (186399பி) (186404ஏ)
(186404பி) (186407ஏ) (186408ஏ)
(186408பி) (186423ஏ) (186455ஏ)
(186473ஏ) (186486ஏ) (186486பி)
(186486சி) (186487ஏ) (186487பி)
(186540ஏ) (186540பி) (186541ஏ)
(186570ஏ) (186570பி) (186570சி)
(186570டி) (186570ஈ) (186586ஏ)
(186586பி) (186625ஏ) (186639ஏ)
(186639பி) (186643ஏ) (186643பி)
(186643சி) (186666ஏ) (186666பி)
(186702ஏ) (187904ஏ) (187906ஏ)
(187906பி) (187906சி) (187924ஏ)
(187924பி)

## மருதங்கேணி

(181381ஏ) (181381பி)

## நல்லூர்

(156884ஏ) (156884பி) (170707ஏ)
(170707பி) (170707சி) (171035ஏ)
(171044ஏ) (171044பி) (171044சி)
(171050ஏ) (171345ஏ) (174161ஏ)
(174161பி) (174161சி) (177187ஏ)
(177187பி) (177187சி) (177187டி)
(179771ஏ) (179797ஏ) (179797பி)
(179797சி) (184181ஏ) (184195ஏ)
(184195பி) (184230ஏ) (184230பி)
(184230சி) (184249ஏ) (184249பி)
(184284ஏ) (184285ஏ) (184286ஏ)
(184288ஏ) (184290ஏ) (184313ஏ)
(187345ஏ) (187403ஏ) (187403பி)
(187405ஏ) (187405பி) (187405சி)
(187405டி) (187406ஏ) (187414ஏ)
(187414பி)

## பருத்தித்துறை

(134986ஏ) (134986பி) (134986சி)
(134986டி)(150957ஏ) (151688ஏ)
(154781ஏ) (154781பி) (154781சி)
(154781டி) (160169ஏ) (165102ஏ)
(165102பி) (165264ஏ) (165264பி)
(165264சி) (165264டி) (165264ஈ)
(167887ஏ) (167887பி) (167887சி)
(167887டி) (167887ஈ) (168000ஏ)
(168000பி) (172435ஏ) (172435பி)
(172435சி) (176412ஏ) (176412பி)
(176412சி) (176412டீ) (176412ஈ)
(181102ஏ) (181128ஏ) (181154ஏ)
(181186ஏ) (181186பி) (181186சி)
(181355ஏ) (181355பி) (181356ஏ)
(182202ஏ) (182202பி) (182205ஏ)
(182208ஏ) (182275ஏ) (182275பி)
(182310ஏ) (182310பி) (182347ஏ)
(182348ஏ) (182361ஏ) (182372ஏ)
(182372பி) (182409ஏ) (182409பி)
(182409சி) (182415ஏ) (182415பி)
(182521ஏ) (183546ஏ) (183546பி)
(183546சி) (183546டி) (183569ஏ)
(183569பி) (183570ஏ) (183572ஏ)
(183595ஏ) (183595பி) (183642ஏ)
(183653ஏ) (183653பி) (183775ஏ)
(183775பி) (183775சி) (183775டி)
(183788ஏ) (183788பி) (183823ஏ)
(183823பி) (183833ஏ) (183833பி)
(183839ஏ) (183841ஏ) (183841பி)
(183862ஏ) (183862பி) (183878ஏ)
(183891ஏ) (183891பி) (183891சி)
(183892ஏ) (183942ஏ) (183942பி)
(183942சி) (183942டி) (183942ஈ)
(183954ஏ) (183954பி) (183954சி)
(183957ஏ) (183957பி) (183969ஏ)
(183974ஏ) (184009ஏ) (185359ஏ)
(185382ஏ) (185382பி) (185390ஏ)
(185394ஏ) (185394பி) (185394சி)
(185394டி) (185394ஈ) (185394எவ்)
(185395ஏ) (185395பி) (185395சி)
(185418ஏ) (185537ஏ) (185546ஏ)
(185612ஏ) (185612பி) (185618ஏ)
(185618பி) (185700ஏ) (185729ஏ)
(185729பி) (185750ஏ) (185761ஏ)
(185789ஏ) (185798ஏ) (188101ஏ)
(188101பி) (188123ஏ) (188123பி)
(188134ஏ) (188134பி) (188134சி)
(188186ஏ) (188186பி) (188188ஏ)
(188188பி) (188201ஏ) (188201பி)
(188276ஏ) (188276பி) (188276சி)
(188299ஏ) (188341ஏ) (188363ஏ)
(188392ஏ) (188415ஏ) (188419ஏ)
(188438ஏ) (188545ஏ) (188565ஏ)
(188592ஏ) (188592பி) (188592சி)
(189823ஏ)

## சண்டிலிப்பாய்

(171198ஏ)

## உடுவில்

(184104ஏ) (184152ஏ) (184152பி)
(184152சி) (184193ஏ) (184193பி)
(184219ஏ) (184238ஏ) (184238பி)
(184238சி) (184250ஏ) (184250பி)
(184262ஏ) (184262பி) (184262சி)
(184267ஏ) (184271ஏ) (184271பி)
(184292ஏ) (187901ஏ) (187901பி)
(187901சி) (187901டி) (187902ஏ)
(187902பி) (187908ஏ) (187937ஏ)

# பாராட்டி நன்றி கூறுகின்றோம்



அச்சுவேலி மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபரும்
யாழ். மத்தியகல்லூரி (தேசியப் பாடசாலை) யின்
இந்நாள் அதிபருமான

## திரு.க.இராசதுரை

**அவர்களுக்கு நன்றி**

அச்சுவேலி மகா வித்தியாலயத்தை அச்சுவேலி மத்திய கல்லூரியாக மாற்றுவதற்காக மாகாண அமைச்சுடன் 1994 ஆம் ஆண்டே தொடர்பு கொண்டு உரிய ஏற்பாடுகளைச் செய்த ஆச்சுவேலி மகா வித்தியாலய முன்னாள் அதிபரும், தற்போதைய யாழ். மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) அதிபருமாகிய திரு. க. இராசதுரை அவர்களையும் அதற்கு உறு துணையாகச் செயற்பட்ட கல்லூரி அதிபர் அவர்களையும் கல்விப் பணிப்பாளர் அவர்களையும் பாடசாலை பழைய மாணவர் சங்கம், பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினர்களையும் ஏனைய பாடசாலை சமூகத்தினரையும், மாகாண அமைச்சு அதிகாரிகளையும் மனதாரப் பாராட்டுகின்றோம். அதற்கான உளமார்ந்த நன்றியையும் இத்தால் தெரிவிக்கின்றோம்.

**அதிபர் இராஜதுரை அவர்களின் மாணவன்**
**"லாலா" உரிமையாளா வ.விஜியபாலா,**
**லாலா சோப் தொழிற்சாலை,**
**அச்சுவேலி.**

(C/16208)


# NEW YEAR ARRIVALS

**SPECIALLY BROUGHT TO SATISFY SPORTING CUSTOMERS**

1. **SOFT BALL BATS: (SIZES 2, 3, 4, 5)**
   சிறுபிள்ளைகளுக்கான நவீன இந்தியன் துடுப்பு மட்டைகள் (வேயது முதல் 13வயது வரை உள்ள சிறுவர்களுக்கு உகந்தன)
2. **BADMINTON RACKETS**
   (a) PALSON, YONEX, CARLTON
   (b) BADMINTON SETS FOR THE LEARNERS
   (C) SHUTTLE COCKS
   - YONEX
   - CARLTON
   - FEATHER
   BADMINTON NETS
3. **T' SHIRTS (IMPORTED)**
   SIZES: 8-12, 14-18, 20-24.
4. **BASKET BALL**
   (SPALDING, MITRE, CHAMPION)
5. **TENNIS BALL**
   - DUNLOP, VOLLEY, SLAZENGER AND AEROPLANE.
6. **CRICKET**
   (A) BALLS
   (B) TROUSERS
   (C) SHIRTS
   (D) BATTING PADS
7. **HOCKEY STICKS**
   - SLAZENGER, DITA.
   HOCKEY BALLS
8. **SOCCER - KNEE CAPS, WHISTLES,**
   ANGLE GUARDS
   BOTTOMS (BLACK)
9. **VOLLEY BALL**
   - BALLS
   - NETS
10. **CARROM BOARDS(IMPORTED)**
    - DISCS
    - POWDER
11. **TABLE TENNIS**
    - RACKETS
    - BALLS (DOUBLE CIRCLE)
12. **CHES BOARD**
    - WOODEN (LARGE)

*SPORTS TROPHIES*
*CUPS*

LIMITED STOCKS.
AFFORDABLE PRICES!

# ARUNS SPORTS SPOT

**347, KASTURIAR ROAD, JAFFNA.**

(C/16205)


## மக்கள் வங்கி ஊழியர் சங்கத் தேர்தல்

யாழ்ப்பாணம்,ஏப்.10

வங்கி ஊழியர் சங்கத்தின் மக்கள் வங்கிக் கிளைக்காக இந்த ஆண்டுக்கான தேர்தல் சனியன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இத்தேர்தலில் முற்போக்கு முன்னணி, சுதந்திர சுயேச்சைக்குழு, விகல்ப ஆகிய மூன்று குழுக்கள் போட்டியிட்டன.

இதில் பிராந்திய முகாமையாளர் கிங்ஸ்லி இராஜநாயகம் தலைமையிலான முற்போக்கு முன்னணி 144 வாக்குகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்றுள்ளது.

கடந்த 96 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நடைபெற்ற 3 தேர்தல்களிலும் முற்போக்கு முன்னணியே வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-10)

## விவசாய உபகரணங்கள் அன்பளிப்பு

வலிகாமம்தெற்கு,ஏப்.10

வீட்டுத்தோட்ட செய்கையை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் கந்தரோடையில் வீட்டுத் தோட்டச் செய்கையில் ஈடுபடும் பலருக்கு பட்டினிக்கு எதிரான நிறுவனம் விவசாய உபகரணங்களை இலவசமாக வழங்கியுள்ளது.

37 பேருக்கு மண்வெட்டிகள், கத்திகள், வாளிகள் போன்ற பொருளகள் வழங்கப்பட்டன. (ம-152)

## மக்கள் வங்கியில் புத்தாண்டு கை விசேஷம்

யாழ்ப்பாணம்,ஏப்.10

புத்தாண்டு தினத்தை முன்னிட்டு மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய கிளையில் எதிர்வரும் 14ஆம் திகதி வாடிக்கையாளர்களுக்கு கைவிசேஷம் வழங்கப்படவுள்ளது.

அன்று காலை 9 மணி தொடக்கம் பகல் 12 மணிவரை வங்கியில் புதிய கணக்குகளைத் திறப்பதற்கும் கைவிசேஷம் வழங்குவதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

புத்தாண்டு தினக்கொடுப்பனவுகளுக்காக மக்கள் வங்கி கொழும்புத் தலைமையகத்திலிருந்து 70 லட்சத்து 80 ஆயிரம் ரூபாவுக்கான புதிய நோட்டுக்கள் யாழ்ப்பாணக் கிளைக்கு வந்து சேர்ந்துள்ளன.

நூறுரூபா, ஐம்பதுரூபா, இருபது ரூபா, பத்து ரூபா ஆகியவற்றின் புதிய தாள்களும் 5ரூபா, 2ரூபா, 1ரூபா, ஆகிய புதிய நாணயக்குற்றிகளும் வந்துள்ளன. (ம-5)


# PRICE SLASHED

தரமான கணனிகள் நம்பமுடியாத விலையில்

**1.Pentium III 866 MHz**
Intel Pentium III 866 MHz processor
20 GB Quantum Hard disk Drive
64 MB SD Ram
14" S VGA Digital Color Monitor View Sonic
8 GB VGA Card
1.44 MB Floppy Disk Drive
ATX Casing
Key Board
Mouse and pad
52X MAX CD Rom Drive
Sound Star 300 Watts Speaker

**2.CELERON 633 MHz**
20 GB Quantum Hard disk Drive
64 MB SD Ram
14" Color Monitor
Key Board
Mouse and pad
1.44 MB Floppy Disk Drive
300 Watts Speaker
52X MAX CD Rom Drive

**3.Cyrix (333 MHz)**
**4.Scanner(Genius)**
**5.Laser Printer(1100), Dot-matrix**

தொடர்புகளுக்கு..
IBMS IT MARKET
No.701 K.K.S Road.
Jaffna
Tel :3165


# எங்களை வாழவைத்த தெய்வத்தின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

வையகத்தில் 12 . 04 . 1936



வானகத்தில் 22 . 03 . 2000

**திருமதி கதிர்காமத்தம்பி சிவக்கொழுந்து**
(அச்சுவேலி)

அன்புக் கடலே பண்பின் சிகரமே!
குடும்பத்தின் ஒளிவிளக்கே!
எங்கள் வாழ்விற்கு ஆதாரமாக இருந்து
எம்மை வழிநடத்திச் சென்ற அன்னையே!
ஆறுதல் சொல்ல யாரிருந்தென்ன - உன்
ஆருயிர் அன்புக்கு ஈடாகுமா?
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகிறோம்.
ஓம் சாந்தி!

*2 ஆம் குறுக்குத் தெரு,*
*பருத்தித்துறை.*

தகவல்:
**கு.ஸ்ரீமோகன்.**
(அச்சுவேலி)

(86464)

# நெஞ்சகலா நினைவலைகள்

**5 ஆம் ஆண்டு** **31 ஆம் நாள்**



அமரர் **முருகேசு சரவணமுத்து** திருமதி **சரவணமுத்து பாக்கியம்**

**10.06.1918<--அன்னை மடியில் --> 17.11.1923**
**20.04.1996<--ஆண்டவன் அடியில --> 11.03.2001**

அன்பாலும் பாசத்தாலும்
எம்மை எல்லாம் ஆளாக்கிய தெய்வங்களே!
வாழ வழி தந்து விட்டு
வழிமாறிப் போனதேன்?
காலங்கள் சென்றாலும் காயவில்லை
எம் விழிகள்!

*தினமும் உங்கள் ஆத்ம சாந்திக்காக கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.*

**ஓம் சாந்தி ...... ஓம் சாந்தி.......**

இன்று (10.04.2001) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

*ஆஸ்பத்திரி வீதி,*
*கொட்டடி,*
*யாழ்ப்பாணம்.*

(86485)

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

# தென்மராட்சி வீதிகள், மதகுகளை திருத்த ரூ.55 கோடி செலவாகும்

## உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம் மதிப்பீடு

தென்மராட்சி,ஏப்.10

சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரி பிரதேச சபை, பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, வடமராட்சி கிழக்கு பிரதேச சபை ஆகிய பகுதிகளில் யுத்தத்தினால் சேதமடைந்த வீதிகள் மற்றும் மதகுகளின் திருத்த வேலைகளுக்கு சுமார் 55 கோடிரூபா தேவையென யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தினால் மதிப்பிடப்பட்டுள்ளது.

உடனடி, குறுகியகால, நடுத்தர, நீண்டகாலத் திட்டங்களின் கீழ் அபிவிருத்தி செய்வதற்கு இந்த நிதி செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டங்களின் பிரகாரம் சாவகச்சேரி நகரசபைக்கு 86 மில்லியன் ரூபாவும் சாவகச்சேரி பிரதேச சபைக்கு 136.75 மில்லியன் ரூபாவும், பளைப் பிரதேச சபைக்கு 300 மில்லியன் ரூபாவும், மருதங்கேணி பிரதேச சபைக்கு 35.5 மில்லியன் ரூபாவும் வீதி, மதகு, பாலங்கள் ஆகியவற்றின் திருத்த வேலைக்குத் தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது.

(க-117)


SALE! SALE!!

இதோ! முந்துங்கள்

உள்ளம் துள்ளும் புதுவருடப் பரிசு!

நாங்கள் ரெடி!

நீங்கள் ரெடியா?

ஆம்

மகாநதி வழங்கும்

மாபெரும் சிறப்புத் தள்ளுபடி

இத்தள்ளுபடி 13.04.01 வரை மட்டுமே!!

நதிகளின் சங்கமம் கடலில்!

சகலவித புடைவைகளின் சங்கமம் மகாநதியில்

புதிது புதிதாய்ப் பூத்திருக்கும்

புதுவருடப் புடைவைகளுக்கு

மகாநதி புடைவை அகம்

(முகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்குக் கைராசியான நிறுவனம்)

16, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

சாறி பிளவுஸ் பீஸ் துணி வகைகளுக்குப் பிரத்தியேகக் காட்சி அறை

16 நவீன சந்தை (மேல் மாடி), யாழ்ப்பாணம்.

(C/15995)



மலரும் புத்தாண்டை முன்னிட்டு

மாபெரும் மலிவு விற்பனை

அதிசயிக்க வைக்கும் ஆடைகள் , அற்புதமான தெரிவுகள்!



* T.சேட்ஸ்,
* சேட்ஸ்,
* கவுண்,
* ரவுசர்ஸ்,
* சாறிவகைகள்.

வெளிநாட்டில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்து விநியோகிப்போர்:

யாழ்நகரில்

யாத்திமால்ஸ்

இல.100, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(C/16192)


### குருநகரில் சிலுவைப் பாதை

குருநகர்,ஏப்.10

எதிர்வரும் 12, 13ஆம் திகதிகளில் குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் மாலை ஆராதனைகள் 5 மணிகரு ஆரம்பமாகவுள்ளன. 14ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு சிலுவைப்பாதையும் அதனைத்தொடர்ந்து மறுநாளான உயிர்த்த ஞாயிறன்று காலை 5 மணிக்கும் தொடர்ந்து 7மணிக்கும் திருப்பலிகள் இடம்பெற உள்ளன.

(க-51)

### இராசவள்ளி கிலோ 15 ரூபா

உரும்பிராய்,ஏப்.10

இராசவள்ளிக் கிழங்கின் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. மருதனார்மடம் சந்தையில் தற்போது கிலோ 15 ரூபாவாக விற்பனையாகிறது.

(க-154)

### ஆணையாளர் சந்திப்பு

வலி.தென்மேற்கு,ஏப்.10

வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் வே.பொ.பாலசிங்கம் யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து உள்ளூராட்சி உதவியாளர்களுடனும் இன்று காலை 10.00 மணிக்கு சந்திப்பு ஒன்றை நடத்தவுள்ளார்.

உள்ளூராட்சி நிர்வாகங்களின் வளர்ச்சி - அபிவிருத்தி மற்றும் உள்ளூராட்சி உதவியாளர்களின் கடமைகள், நலன்கள் பற்றியும் இந்தச் சந்திப்பில் விரிவாக ஆராயப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாட்டை பதில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தே.சிவராஜலிங்கம் மேற்கொண்டுள்ளார்.

(ம-185)

### நெல்லியடிச் சந்தையில் மோசடி

தென்மராட்சி,ஏப்.10

நெல்லியடி சந்தை வியாபாரிகளில் சிலர் நிறுவையில் மோசடி செய்வதாக பொதுமக்கள் புகார் கூறுகின்றனர்.

மரக்கறி, வெங்காயம், மீன் போன்றவற்றில் ஒரு கிலோவுக்கு 100 கிராம் வரை வெட்டப்படுவதாக நுகர்வோர் பலரும் தெரிவிக்கின்றனர்.

(க-117)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அதிபர்
திருமதி ந.சந்திரசேகரம்
(S.P.Trd,S.L.P.S. 2-1)




உப அதிபர்
திரு.ப.மார்க்கண்டன்
(S.L.T.S. - 1)

எமது பாடசாலை அதிபர், இலங்கை அதிபர் சேவை 2-1 இற்கு பதவி உயர்வு பெற்றதையிட்டும், எமது பாடசாலை உப அதிபர், இலங்கை ஆசிரியர் சேவை தரம் 1 இற்கு பதவி உயர்வு பெற்றதையிட்டும் இவ்விருவரையும் பாராட்டுவதோடு, இவர்களின் கல்விப் பணி மேலும் சிறக்க மனதார வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர், ஊழியர், மாணவர் சமூகம்,
*யா/இமையாணன் அ.த.க.வித்தியாலயம்,*
*வல்வெட்டித்துறை.*

(86450)

## நெஞ்சம் பதற - நினைவுகள் கனக்க
## 31 ஆம் நாள் நினைவுக் கலசம்



### அமரர் ஆறுமுகம் மகாலிங்கம்
அவர்கள்

(பிரதேச செயலர் - உடுவில், பதில் பிரதேச செயலர் - நல்லூர், உப தலைவர் - இந்துசமயப் பேரவை.)

| மலர்வு | மறைவு |
|---|---|
| 08-11-1941 | 11-03-2001 |

ஐயாவுன் அழகு முகம் மறைந்து போச்சோ?
அழகொளிரும் திருவுருவம் எரிந்து ஆச்சோ?
பையெனவே பைந்தமிழும் மதமும் வாழப்
பார் போற்றப் பற்பலவாய் சேவை கண்டீர்!
கையணைத்து ஏழையரைக் காத்து மண்ணிற்
கடமைக்கோர் கோபுரமாய் மிளிர்ந்தீர் ஐயா!
வையகத்தி லென்றுமுங்கள் புகழே வாழும்
வல்லவன் தாள் வாழியநீர் வணங்கி நின்றோம்!

* ஆத்ம சாந்திக்கு எம் அஞ்சலிகள் *

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

- ஸ்ரீசந்திரசேகரப் பிள்ளையார் தேவஸ்தான பரிபாலன சபை
- கிராம அலுவலர் J/116, கோண்டாவில் தென் மேற்கு.
- சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், J/116, கோண்டாவில் தென் மேற்கு.

(86425)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 22 | 11 |
| - | - |
| 12 | 03 |
| - | - |
| 1922 | 2001 |



### அமரர்
### கனகசபைதம்பு கதிரவேலு

ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்தி விட்டு
மீளாத்துயில் கொண்ட
எமது அன்புத் தெய்வத்துக்கு
எமது இதய அஞ்சலிகள்!

இன்று (10-04-2001) செவ்வாய்க்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பருத்தித்துறை வீதி,*
*நீர்வேலி தெற்கு,*
*நீர்வேலி.*

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(86115)

## புதிய ஓடியோ CD வெளியீடுகள்

1) நித்தியசிறியின் சங்கீதக் கச்சேரிகள்
2) வைரமுத்துவின் வரித்துளிகள் (கவிதை)
3) குன்னக்குடி வைத்தியநாதனின் வயலின் கச்சேரிகள்
4) குன்றூர் கோபாலனின் SAXOPHONE கச்சேரி
5) ரவிசங்கரின் வாத்தியக் கச்சேரிகள்
6) தபேலா, சோலோ கச்சேரிகள்
7) காரைக்குறிச்சி அருணாசலத்தின் நாதஸ்வரக் கச்சேரிகள்
8) வீணைக் கச்சேரிகள்
9) புல்லாங்குழல், சோலோக் கச்சேரிகள்

**TTN வீடியோ, ஓடியோ**

27, கோயில் வீதி, கொக்குவில்.

305, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.

(86456)


## இணைப்பதிகாரி நாளை காங்கேசன் செல்கிறார்

காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளைப் பார்வையிடுவதற்காக நாளை புதன்கிழமை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.இணைப் பதிகாரி அங்கு செல்லவுள்ளார்.

தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளின் உறவினர்களால் வழங்கப்படும் கடிதம் மற்றும் உணவுப் பொதிகளையும் தாம் எடுத்துச் சென்று கைதிகளிடம் ஒப்படைக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (க-6)

## கைதடிப்பாலம் திருத்தப்படுகிறது

கைதடி - கோப்பாய் பாலத திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் கைதடி வடக்கு பஸ் சேவை தற்பொழுது கோப்பாய் சந்தி வரையே நடைபெற்று வருகிறது.

இராணுவத்தினரால் தற்காலிகமாகப் போடப்பட்டிருந்த இரும்புப் பாலம் அகற்றப்பட்டு தற்பொழுது திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (க-5)


## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் மரியாம்பிள்ளை செல்லத்துரை**
(இளைப்பாறிய M.S. அலுவலர், யாழ்.தபாற்கந்தோர்)

இறப்பு:- 10-04-1989

ஐயா! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் அன்புள்ளத்தையும் எங்களில் வைத்திருந்த பாசத்தையும் உயிர் உள்ளவரைக்கும் நாங்கள் மறக்கமாட்டோம்.

அன்பு மனைவி: செ.பாக்கியம்,
அன்பு மகள்: S.T.சகுந்தலாதேவி.

*40/05, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.*

(86436)



கல்வியியற் கல்லூரி டிப்ளோமா

## ஆசிரியர் கலந்துரையாடல்

*நாள்:* 12.04.2001 வியாழக்கிழமை

*நேரம்:* காலை 9.30 மணி

*இடம்:* யாழ்.இந்துக் கல்லூரி

கல்வியியற் கல்லூரிகளில் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பட்டம் பெற்று வெளியேறிய ஆசிரியர்களுக்கான அமைப்பு ஒன்றை ஸ்தாபிப்பதற்கான அவசர கலந்துரையாடல்.

சம்பந்தப்பட்ட சகலரையும் ஒன்று கூடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

2ஆம் அணியினர்
*வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி.*

(C/16112)



## தேவை

அரிசி, மாவு அரைக்கும் மற்றும் நீர் இறைக்கும் இயந்திரங்கள், ஜெனரேற்றர் என்பனவும், அவற்றிற்கான உதிரிப் பாகங்களும் விறபனை செய்வதில் அனுபவமுள்ளவர் தேவை. நாளை (11.04.2001) புதன்கிழமை காலை 9.00 - 10.00 மணிக்கிடையில் நேரில் சமுகம் தரவும்.

**தே.இ.பிள்ளை**
இல.117, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (86408)



## மாபெரும் மலிவு விற்பனை!

புத்தாண்டை முன்னிட்டு அனைத்துப் புடைவை ரகங்களும் உங்கள் மனம் போல் தெரிவுசெய்து மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**விநாயகர் புடைவையகம்**

இல.63A, 62A, 61, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்.

(C/16119)



## அதே 'கூல்' விலையில், அதே 'கூல்' பியர்.




வெயில் எறிக்கும் வேளையில் உள்ளம் குளிரவைக்கும் விலையில் பியர் கிடைக்காவிட்டால் என்ன பயன்?

எமது வாடிக்கையாளர்களின் விசேட நன்மை கருதி வெளியிடப்படுகிறது.

விநியோகஸ்தர்கள்:-
**வாமாஸ் வைன் ஸ்ரோர்ஸ்**
56/7, 56/8, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/16033)

# உடன் தயாரிப்பு நூடில்ஸ் தடை குறித்து தூதரக அதிகாரிகள் வியப்பு

## வன்னி மக்களுக்கு பயன்படுத்தத் தெரியாது என்கிறார் பிரிகேடியர்

கொழும்பு,ஏப்.10

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு எடுத்துச் செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டிருந்த பொருளகளில் சிலவற்றின் மீதான தடையை அரசு அண்மையில் அகற்றியது எனினும் தடை அகற்றப்படாத பொருள்களின் பட்டியலில் உடன் தயாரிப்பு நூடில்ஸ்"க்கு தொடர்ந்து தடை விதிக்கப்பட்டுள்ளது. இது குறித்து வெளிநாட்டுத் தூதரகங்களில் பணியாற்றும் இராணுவ அதிகாரிகள் பெரும் வியப்புத் தெரிவித்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை இராணுவத் தலைமையகத்தில் நடைபெற்ற மாதாந்தக் களநிலை தொடர்பான சந்திப்பின் போதே அவர்கள் இவ்வாறு தமது ஆச்சரியத்தை வெளியிட்டுள்ளனர்.

புலிகளின் பகுதிக்கு எடுத்துச் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்ட பொருள்களின் பட்டியலை இராணுவ நடவடிக்கைகளுக்கான இயக்குநர் பிரிகேடியர் நிமல் ஜெயசூரிய வாசித்தார். அதனைக் கேட்டுக் கொண்டிருந்த வெளிநாட்டுத் தூதரக இராணுவ அதிகாரி ஒருவர் உடன் தயாரிப்பு நூடில்ஸ்"க்கு ஏன் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று வினவினார் அதற்கு 'வன்னியிலுள்ள மக்களுக்கு அதனை எப்படிப் பயன்படுத்துவது என்று தெரியாது' - என்று பதிலளித்தார் பிரிகேடியர்.

இதனைக் கேட்டுக்கொண்டிருந்த மற்றோர் அதிகாரி "முட்டை அவிக்கத் தெரிந்த அந்த மக்களுக்கு நூடில்ஸ் அவிக்கத் தெரியாதா"? என்று வினவியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

சாதாரண நூடில்ஸை எடுத்துச் செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (ம)

### கைவிடப்பட்ட சைக்கிள்

யாழ்ப்பாணம்,ஏப்.10

யாழ்மாநகர சபை வளவில் பெண்களுக்கான கைவிடப்பட்ட சைக்கிள் ஒன்று அனாதரவான நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை மாநகர சபையின் ஆணையாளர் அலுவலகம் முன்பாக கண்டுபிடிக்கப்பட்ட இச்சைக்கிள் தற்பொழுது மாநகரசபை அலுவலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

உரிமையாளர் தகுந்த ஆதாரங்களைக் காட்டி அலுவலக நேரத்தில் சைக்கிளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று மாநகர சபை ஆணையாளர் இராசா தணிகாசலம் தெரிவித்துள்ளார். (ம-5)

### செய்முறைப் பரீட்சை

வலிகாமம் தெற்கு,ஏப்.10

வடஇலங்கை சங்கீத சபையினர் அகிலஇலங்கை ரீதியில் நடத்தி வரும் செய்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. இலங்கை முழுவதிலும் இருந்து 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பரீட்சார்த்திகள் இம்முறை பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

இப்பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் இவ்வாரத்தில் அனுப்பி வைக்கப்படவுள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து 5 ஆயிரத்துக்கும் கூடுதலானவர்கள் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். (ம-152)

# புத்தாண்டு தினத்தில் வெளிநாட்டு நாணய மாற்று சேவை இலங்கை வங்கிக் கிளைகளில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.10

புத்தாண்டு தினமான எதிர்வரும் சனிக்கிழமை இலங்கை வங்கியில் யாழ். மேற்தரக்கிளையில் வெளிநாட்டு நாணயங்கள் மாற்றிக் கொடுப்பதற்கான சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

அன்றைய தினம் மானிப்பாய் மற்றும் யாழ்.ஸ்ரான்லி வீதி ஆகிய இடங்களில் உள்ள இலங்கை வங்கிக் கிளைகளில் வெளிநாட்டில் வதிபவர்களின் கணக்குகளும் ஆரம்பித்து வைக்கப்படும் என்று வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-5)

### குடிதண்ணீர் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஏப்.10

மானிப்பாய், மருதடி விநாயகர் ஆலயத்தின உற்சவகாலத்தை ஒட்டி ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினால் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தினமும் மூன்று தண்ணீர்த் தாங்கிகள் மூலம் அடியார்களுக்கு குடிதண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. (ம-10)

### பாடசாலைகள் இன்று விடுமுறை

யாழ்ப்பாணம்,ஏப்.10

அரசாங்கப் பாடசாலைகள் யாவும் இன்று முதலாந்தவணை விடுமுறைக்காக மூடப்படுகின்றன.

எதிர்வரும் 23ஆம் திகதி மீண்டும் இரண்டாம் தவணைக்காக அவை திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-10)

# பாதீனியம் அதி வேகமாகப் பரவுகின்றது; விவசாயத் திணைக்களம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.10

யாழ்.மாவட்டத்தில் பாதீனியம் களை அதிவேகமாகப் பரவி வருவதாக விவசாயத்திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்த மார்ச் மாத நடுப்பகுதியளவில் 45 ஹெக்டேயரில் பரவியிருந்த பாதீனியம் களை தற்பொழுது 46.5 ஹெக்டேயருக்கு பரவியுள்ளதாக மேற்படி புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இக்களை தற்பொழுது புத்தூர், நவக்கிரி, சிறுப்பிட்டி, ஆவரங்கால், கோப்பாய், உரும்பிராய், மருதனார்மடம், உடுவில், ஈவினை, புன்னாலைகட்டுவன், ஆகிய இடங்களிலும் பரவியுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை உயர்பாதுகாப்பு வலயமான பலாலிப் பகுதியிலும் பாதீனியம் களை பரவியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-55)

# யாழ்.கரையோரக் கிராமங்களின் அவல நிலை; கிறிஸ்தவ ஆன்மீகத் தூண்டலுக்குப் பின்னடைவு!

இரண்டு தசாப்தங்களாகத் தொடர்ந்துகொண்டிருக்கும் இனப் போரினால் பல்லாயிரக்கணக்கான உயிர்களும் பல கோடி ரூபா பெறுமதி வாய்ந்த உடைமைகளும் அழிவுற்றுக் கொண்டிருக்கின்றன. கல்வி, கலாசார, மருத்துவ, வியாபார, போக்குவரத்துத்துறைகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதேவேளை ஆன்மீகத்துறைக்கும் இப்போர் பெரும் தாக்கத்தைக் கொடுத்து வருகிறது.

ஒரு சமுதாயம் - பிரதேசம் - நாடு எவ்வளவுக்கு ஆன்மீகத்தில் வேரூன்றி உள்ளதோ, அதே அளவுக்கு அன்பு, நீதி, நேர்மை, மனித விழுமியங்களின் பரிமாணம் தழைத்தோங்கும் என்பது மறுக்கமுடியாத பேருண்மையாகும். இந்நோக்கில் யாழ். கத்தோலிக்க திருச்சபைக்கு இப்போரினால் அநேக இழப்புகளும ஆன்மீகப் பாதையில் கிறிஸ்தவர்களை வழிப்படுத்துவதில் மிகுந்த இடர்பாடுகளும் தோன்றியுள்ளன.

யாழ்.நகரின் கரையோரப்பகுதிகள் பெரும்பாலும் கிறிஸ்தவ சமூகத்தை தன்னகத்தே கொண்டுள்ளன. தத்தமது கிராமங்களில் தாம் வழிபடும் புனிதர்களுக்கு ஆலயம் அமைத்து வழிபட்டுவருகின்றனர். கடந்த காலங்களில் எறிகணை, விமானத் தாக்குதல்களினால் பல தெய்வீகஸ் தலங்கள் பாதிப்படைந்தன. குருநகர் புனிதயாகப்பர் ஆலயம், பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயம், யாழ். மரியன்னை பேராலயம் என்பன அவற்றில் குறிப்பிட்ட சிலவாகும்.

### 1995ஆம் ஆண்டுக்குப் பின்....

வரலாற்று இடப்பெயர்வை அடுத்து மக்கள் வலிகாமம் வந்தடைந்த போது, பாதுகாப்புக் காரணங்களால் யாழ். நகரை அண்டிய சில பகுதிகளில் மக்கள் குடியமர அனுமதிக்கப்படவில்லை. இவற்றுள் கத்தோலிக்கர்களின் ஒரு யாத்திரைத் தலமாக விளங்கிய கிழக்கு அரியாலை புனித வேளாங்கன்னி மாதா ஆலயப்பகுதியும் பூம்புகார் புனித பீலிப்பு நேரியார் ஆலயப் பகுதியும் அடங்கும். அங்கு வாழ்ந்த மக்கள் தமது வாழ்விடங்களை விட்டுச் சிதறி வாழ்ந்து வருகின்றனர்.

அத்துடன் கொழும்புத்துறை மணிப்புரிப்பகுதியில் (மணியந் தோட்டம்) கர்த்தர் தேவாலயமும், உதயபுரத்தில் புனித செபஸ்தியார் ஆலயமும், வசந்தபுரத்தில் புனித யாகப்பர் ஆலயமும் அமைந்து பக்தர்களுக்கு அருள் வழங்கிவந்தன. இவற்றுள் மணிப்புரி கத்தர்




தேவாலயத்தில் இத்தவக்காலத்தில் விசேடமாக மக்கள் சென்று வழிபடுவர். தவக்காலத்தின் 5 ஆம் வாரத்தில் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் இருந்து யேசுவின் திருப்பாடுகளை நினைவூட்டும் பக்தி நிகழ்வாகிய திருச்சிலுவைப்பவனி ஆரம்பமாகும். பெருமளவு மக்கள் இப்பவனியோடு இணைந்து எழிலூர், கொழும்புத்துறை வழியாகச் சென்று கத்தர் கோயிலை அடைவது வழக்கம்.

இந்நிகழ்வானது கிறிஸ்தவ மக்களுக்கு மட்டுமன்றி பிறசமய சகோதரர்களின் இதயத்திலும் பக்தி உணர்வையும் பிறரன்பையும் ஆழப்படுத்தும் உணர்வுபூர்வ பவனியாக அமைந்து வந்தது. தற்போது இவ்வீதிகள் நிஜமான கல்வாரிப் பாதை போன்று குன்றும் குழியும் முட்புதர்களும் முட்கம்பிகளும் நிறைந்து காணப்படுகின்றன. கடந்த ஆறு வருடங்களாக இப்பகுதிகளுக்கு எவரும் செல்லமுடியாதுள்ளது. எனவே பல் குழல் எறிகணைகளின் தொடர் தாக்குதல்களினால் இவ்வாலயங்கள அழிவுற்று இருக்கலாம் என்ற அச்சம் மேலோங்கி நிற்கிறது.

### துறையூர் செபமாலைப் பதியின் நிலை

இலங்கையின் அப்போஸ்தலரும் முத்திப்பேறு பெற்றவருமான யோசேவாஸ் முனிவர் தனது யாழ். வருகையின்போது கால்பதித்த இடம் கொழும்புத்துறை ஆகும். இப்பகுதியிலே பல பழைமை வாய்ந்த ஆலயங்களும் குருக்களை உருவாக்கம் செய்யும் பல குருமடங்களும் அமைநதுள்ளன. இவற்றின் வழிநடத்துதலால் ஆன்மீக நெறியிலும், சமூகக்கட்டமைப்பிலும் மக்கள் முன்னேறி வந்த வேளை மீண்டும் 10-05-2000 அன்று இடம் பெயர நேரிட்டது. தமது சொத்துக்கள், வீடுகளை விட்டு வெறுங்கையுடன் வேற்றிடம் சென்றனர்.

அப்போது யாழ்நகரின மடுத்திருப்பதி என்று அழைக்கப்படும் கொழும்புத்துறை புனித செபமாலை மாதா ஆலயப்பகுதி மக்களும் அகதிகளாயினர். மருதமடு அன்னையின் புனிதப்பதிக்கு செல்லமுடியாத பக்தர்கள் ஆயிரக்கணக்கில் ஒன்றுகூடி வருடாவருடம் ஐப்பசி முதல் ஞாயிறு தினத்தில் பெருவிழா எடுத்து அன்னையிடம் தமது ஏக்கங்கள், உள்ளக் குமுறல்களுக்கு அமைதி தேடுவது இப்பதியிலே தான். இது ஒரு நூற்றாண்டு பழைமைமிக்க இறை சந்நிதியாகும்.

கடந்த பத்து மாதங்களின் பின்னர் பாதுகாப்புப் படையினரின் அனுமதியுடன் 11-03-2001 ஞாயிறு திருப்பலி நிறைவேற்றப்பட்டது. மடு அன்னை தென்னிலங்கை மக்களுக்கு சமாதானச் செய்தியுடன் செல்லுமிவ்வேளை பாண்டியன்தாழ்விலிருந்து பெருந்தொகையானோர் கால் நடையாக ஆலயம் நோக்கி யாத்திரை மேற்கொண்ட காட்சி உள்ளத்தை உருக்குவதாக அமைந்தது.

அப்பகுதிகள் பழைய மெருகின்றி, சோலையிழந்து மயான பூமி போன்று காட்சியளிக்கின்றன. ஆலயத்தின் முகப்பு மண்டபம் எறிகணை வீச்சால் சிதைவுண்டுள்ளது. திருவிழாவின் போது யாத்திரிகர்களுக்கு நிழல் கொடுக்கும் 50 வருட பழைமை வாய்ந்த பெருவிருட்சங்கள் தறிக்கப்பட்டுள்ளன. அத்துடன் ஆலயத்துக்கு வருமானம் ஈட்டித்தரும் 75க்கும் மேற்பட்ட தென்னை மரங்களும் தறித்து சேதப்படுத்தப்பட்டுள்ளன. சோலை வனமாயிருந்த ஆலயச் சூழல் பாலைவனமாயுள்ளது.

ஓராண்டுக்கு முன்னர் வடிவமைக்கப்பட்ட ஒரேயொரு திருவிழாவுக்கு வலம்வந்த சித்திரத்தேர் அதன் தரிப்பிடம் சேதமுற்றதால் அநாதரவாக நிற்கிறது. ஆலயச் சுற்றுப்புற மதில்கள் நிலத்தில் சாய்ந்துள்ளன. நீண்ட நாள்களுக்குப்பின் ஆலயம் சென்று திரும்பிய மக்கள் தமது கிராம அவல நிலையைக்கண்ணுற்று மௌனக் கண்ணீரோடு திரும்பினர். வீதியோரங்களில் மின்கம்பங்கள் முறிந்து தலை வணங்கி நிற்கின்றன.

இக்கிராம தரிசனத்தின் போது அருட்தந்தையர்களான சாள்ஸ் கொலின், சூசைநாதன், டேவிற் அடிகள் ஆகியோரும் அருட்சகோதரிகளும் உடன் இருந்தது அனைவருக்கும் தெம்பூட்டியது.

கொழும்புத்துறையை அண்டிய அரியாலை புனித யூதாததேயு ஆலயச் சூழல், எழிலூர் புனித வேளாங்கண்ணி ஆலயப்பங்கு என்பனவும் மக்கள் சென்றுவர முடியாதுள்ளன. தற்போதைய நிலையில் மக்கள் குடியமர முடியாத சூனியப் பிரதேசமாக அனைத்து வளங்களும் அழிவுற்றுக் காணப்படுகிறது. பல் குழலின் கோரத்தனத்தில் விரல்விட்டு எண்ணக்கூடிய வீடுகளே சேதமின்றி எஞ்சியுள்ளன.

இப்பகுதிகள் வழமைக்குத் திரும்ப நீண்டகாலம் தேவைப்படும் போல் தோன்றுகின்றது. தமது அன்றாட ஆன்மீகத் தேடல்களை நிறைவேற்றமுடியாது சோர்வுற்று உடல், உளப் பாதிப்புக்குள்ளாகி வருகிறார்கள் இப்பிரதேச மக்கள்.

**எஸ்.யேசுதாஸ்**
*கொழும்புத்துறை*

### ஆன்மீகத்தின் அடித்தளமான குருமடங்கள்

அனைத்துக் கல்வி வசதிகளுடனும் அமைதியான சூழலில் கொழும்புத்துறை சுவாமியார் வீதியின் அந்தத்தில் - கடற்கரையோரத்தில் - பல குருமடங்கள் அமைந்துள்ளன. இக்குருத்துவக் கல்லூரி களில் இருந்து பல குருக்கள்மார் உருவாக்கம் பெற்று பணித்தளங்களிற்கு வருகிறார்கள்.

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி, புனித வளனார் குருமடம், அமலமரித் தியாகிகள் குருமடம், புனித சூசையப்பர் ஆலயம், வயோதிப சாலைகள், திருவுளப் பணியாளர் சபை எனப் பல கத்தோலிக்க மறை, சமூகப் பணியார்வ நிறுவனங்கள் கொழும்புத்துறையிலேயே குடிகொண்டுள்ளன.

இந்த ஆன்மீக நிலையங்கள் சடுதியாக இடப்பெயர்வைச் சந்தித்ததால் பெரும் இழப்புக்குள்ளாயின. தளபாடங்கள் காணமற்போயுள்ளன. கட்டடங்களுக்கும் பலத்த சேதங்கள், ஏற்பட்டுள்ளன. இதனால் குருமட மாணவர்களின் கல்வி பல இடர்பாடுகளை எதிர்நோக்கியுள்ளது. வசதிகள் வளங்களற்ற பிற இடங்களிலேயே இவை தற்போது இயங்கி வருகின்றன.

மேலும் தமது பணிவாழ்வால் பல இடங்களில் சேவையாற்றி நற்பிரசைகளை உருவாக்கிய வயோதிபக் குருக்கள் இளைப்பாறும் அமல உற்பவ இளைப்பாற்று இல்லமும் அங்கே அமைந்துள்ளது. அத்துடன் திருக்குடும்பக் கன்னியர் சபையால் நிர்வகிக்கப்பட்டுவரும் வயோதிப இல்லமும் உண்டு. அநாதைகள், கைவிடப்பட்டோர், நலிவுற்றோரான முதியவர்கள் தமது அந்திம காலத்தில் நிறை அன்பையும் பராமரிப்பையும் அனுபவித்து அமைதியுடன் வாழ்ந்து வந்த ஒருதொண்டு நிறுவனமா இது திகழ்ந்தது.

இவை அனைத்தும் தற்போது இயங்க முடியாத நிலையே காணப்படுகிறது.ஒட்டுமொத்தத்தில் இப்போரும் இடப்பெயர்வுகளும் யாழ்.திருச்சபையின் ஆன்மீக அடித்தளப் பணிகளுக்கும் மனித மேம்பாட்டிற்கும் அளவிடமுடியாத தாக்கத்தையும் சவாலையும் தோற்றுவித்துள்ளது. இவைகள் மீண்டும் தம் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் சாதகமான நிலை வருமா?

இந்நிலையில் சொல்லொணாத் துன்பங்களுடன் பிற இடங்களில் வாழும் மக்கள் சொந்தக் கிராமத்தில் வீடுகளில் குடியேறி தமது இயல்பு வாழ்வைத் தொடர முடியுமா?

ஆலயங்களில் தினசரி மணியோசை கேட்குமா?

சமயசடங்குகளில் சங்கமிப்போமா?

சமாதானத்துடன் கூடிய நிம்மதி வாழ்வில் கிட்டுமா? என்று அவாவி நிற்கிறார்கள்.

நிரந்தர சமாதானத்தை உருவாக்கவல்லது இறைசக்தியே என்ற நம்பிக்கையில் அந்த நாளை எதிர்பார்த்திருக்கின்றனர்.

" சமாதானம் செய்வோர் பேறு பெற்றோர்........"

# சின்னஞ்சிறு விளம்பரம்

### இலக்கியக் கட்டுரைகள்

சிறுகதை மதிப்பீட்டை இலக்கிய விமர்சனமாகப் படிக்க வேண்டும். வினாவிடைகள் சிறுகதை மதிப்பீடு ஆகமாட்டா. அராலியூர் ந.சுந்தரம் பிள்ளையின் இந்த நூலில் உள்ள எல்லாக் கட்டுரைகளும் இலக்கிய விமர்சனக் கட்டுரைகளே! (86421)

### நாளை மீண்டும் சனிமாற்றம்

6 மாத வக்கிர சஞ்சாரத்தின் பின் மீண்டும் நாளை சனி இடபராசிக்கு மாற்றமடைகிறது. விஷு வருஷ சித்திரைப் புத்தாண்டுப் பலன்கள் ரூபா 10/- க்கு எங்கும் விற்பனையாகின்றன. கணிப்பாசிரியர்: சத்யா, 3ஆம் மைல், ஆனைக்கோட்டை. தொலைபேசி: 021-2753. (86445)

### கோழிக்குஞ்சு விற்பனைக்கு

சிவப்பு, கறுப்புப் பேட்டுக் குஞ்சுகள், புறோயிலர் குஞ்சுகள் செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். ஓடர்களை முன்கூட்டியே பதிவு செய்யவும். தொடர்பு: கிருஷ்ணகுமார், பொன்னாலை வீதி, விதானை வளவு, மானிப்பாய். (86442)

### புதிய புத்தகங்கள்

அம்பிகைபாகனின் ஆண்டு 5 புலமைப்பரிசில் 2001 - 2002 இற்கான முற்றிலும் புதிய பதிப்பு, றமணனின் கம்பியூட்டர் நூல்கள், கேசவனின் அளவையியல், மெய்யியல் புத்தகங்கள், வண்ணமிகு வாழ்த்து மடல்கள் விற்பனையாகின்றன. பரணன், 138, ராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். தொலைபேசி: 2365. (86470)

### தவறிவிட்டது

இல.64, யமுனா வீதி, நல்லூர் என்னும் முகவரியைச் சேர்ந்த நடராசா இந்திராவதி என்பவரது விஷேட அ.அட்டை (இல.0902009345) யாழ். பஸ் நிலையத்தில் 03.04.2001 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பஸ் நிலையத்துக்கு முன்பாகவுள்ள சன்லைற் றைக்கிளீனிஸில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (86472)

### விற்பனைக்கு

பவுண் அடிக்கும் டைமெசின், பவுண் 1, 1/2, 1/4 மற்றும் பிள்ளையார், முருகன், இலக்குமி (மொத்தம் 13 கசற்) தொடர்பு: V.V.M.S, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (யாழ். பைரவி கடைச் சல் தொழிலகம் முன்பாக) (86294)

**NATIONAL (DOUBLE DOOR), SINGER REFRIGERATOR** கள் விற்பனைக்குண்டு. **SAIRAM,** 101, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.(86468)

### DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமைய கட்டிக் கொடுக்கப்படும். (இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூபா 350/-) தொடர்பு:- பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல: 3081. *(C/15377)*

### வீட்டுப் பணிப்பெண் தேவை

ஆடுபாவத்தை, வதிரி, கரவெட்டியைச் சேர்ந்த வைத்திய குடும்பத்துக்கு வீட்டுப் பணிப்பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். முழு விவரத்துடன் நேரடியாக வோ அல்லது கடிதமூலமாகவோ தொடர்பு கொள்ளவும். தொடர்புகளுக்கு: Dr. ராஜன், மே/பா, சுந்தரலிங்கம், வதிரி, கரவெட்டி. (86306)

### மணமகள் தேவை

யாழ்.இந்து குடும்பத்தைச் சேர்ந்த, (33) விவாகரத்துப் பெற்ற, செவ்வாய்க் குற்றமற்ற, ஆயிலிய நட்சத்திர, தனியார் வைத்தியராக, சொந்த வைத்திய நிலையம் வைத்து நடத்துபவருக்கு நல்ல குடும்பத்தைச் சேர்ந்த, படித்த, அழகான, பண்பான பெண்ணை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்புக்கு: விள.இல.1254, மே/பா உதயன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (86305)

### அபிவிருத்திச் சங்கங்கள் புனரமைப்பு

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியன புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் குடமியன் மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்கம், கைதடி நுணாவில் மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்கம் ஆகியவை அண்மையில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன. (ம-117)

### பயிற்சி

கார் ஓட்டுவதற்கு சிறந்த முறையில் பயிற்சியளிக்கப்படும். தினமும் முற்பகல் 11.00 மணிக்கும் பிற்பகல் 2.00 மணிக்கும் இடையில் மட்டும் தொடர்புகொள்ளவும்.

இல. 6, 4ஆம் ஒழுங்கை, பிறவுண்வீதி, (86474) யாழ்ப்பாணம்.

---

# உளமார வாழ்த்துகின்றோம்



## உயர்திரு.ச.வாமதேவன் அவர்கள்
**(Spl.Ma.Trd.,S.L.P.S. 2-1)**

(பிரதிஅதிபர், யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்)

இலங்கை அதிபர் சேவை தரம் 2-1க்குப் பதவியுயர்வு பெற்றமையையிட்டு உளமாரப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேன்மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று கல்விப்பணி ஆற்ற வேண்டுமென்று இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

*பொற்பதி வீதி, கொக்குவில்.* (86452) ஆசிரியர்கள், விக்னேஸ்வரா கல்வி நிலையம்.

---

# 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 21 - 07 - 1931



மறைவு 11 - 03 - 2001

## அமரர் மயில்வாகனம் பூபாலசிங்கம்
**(பூலோகம்)**

*(ஓய்வுபெற்ற தபால் ஊழியர் - அரியாலை)*

**நல்ல பண்பாளர்**

வேட்டையாடி மகிழும் கலைஞர்
வீந்தையாகப் பேசும் நடிகர் - சுதேசிய
நாட் கொண்டாட்டங்களில்
சுதந்திர வாஞ்சையோடு இயங்கும் அன்பர்

ஊரில் நடக்கும் விழாக்களிலே
உரிமையோடு கலந்திடுவார் - நல்ல
பேரைச் சூடி மகிழ்ந்திடுவார்
பெரும் பயன்களிங்கு விளைத்திடுவார்

நகைச் சுவை ததும்ப பேசிடுவார்
நாடகம் விரும்பி நடித்திடுவார்
பகையுணர்வை அறவே விலக்கிடுவார்
பண்புணர்வை பாரில் வளர்த்திடுவார்

நேர்மையோடு உழைக்கும் வள்ளல்
நேசம் காட்டி வாழும் மனிதர்
கூர்மையான அறிவு மிக்கார்
கூடிப் பழகும் கொள்கையாளர்

தபாற்சேவை பணிகளாற்றி மக்களிடம்
தாளாத கீர்த்திபல தேடிக் கொண்டார்
தியாக மனம் மிக்க அன்பர் - ஈழத்
திருநாடு போற்றும் பெரியார்

இன்று (10.04.2001) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*இல.6, கற்பக விநாயகர் லேன், கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.* - குடும்பத்தினர். (86475)

---

# வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கு தொழிற் பயிற்சி வழங்கத் திட்டம்

வலிகாமம்தெற்கு,ஏப்.10

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் க.பொ.த. சாதாரணதரம் வரை படித்து விட்டு மேற் கல்வியைத் தொடரமுடியாத இளைஞர், யுவதிகளுக்கு தொழிற் பயிற்சி வழங்கி ஊக்குவிக்கும் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு தேர்தல் தொகுதியில் இருந்தும் தலா நூறு பேர் தெரிவுசெய்யப்படுவர். அவர்கள் வாழும் சூழலில் காணப்படும் மூலவளங்களின் அடிப்படையில் ஐந்து வகையான தொழிற் பயிற்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றில் அவர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்படும்.

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் மேற்படி திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஆலோசனைக் கூட்டம் பிரதேச செயலர் கே. கேதீஸ்வரன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் இப்பகுதியில் வழங்கப்படவுள்ள பயிற்சி நெறிகள், இடங்கள் என்பன தெரிவுசெய்யப்பட்டன. (ம-152)

---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



குரும்பைகட்டி, புலோலி தெற்கு, புலோலியைச் சேர்ந்த

## திரு.வீரகத்திப்பிள்ளை வடிவேல்
**(MATHS Sp.Trd.,S.L.P.S. 2-1)**

(அதிபர் யா/திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலயம்)


அவர்கள் இலங்கை அதிபர் சேவை தரம் 2-1இற்குப் பதவி உயர்வு பெற்றமையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகிறோம். அவரது சீரிய கல்விப்பணி மேலோங்கவும் மேன் மேலும் பதவி உயர்வுகள் கிடைக்கவும் அருள்புரியுமாறு ஆண்டவனை அன்புடன் பணிகின்றோம்.

**திரு.சி.நடராஜலிங்கமும்** *அவர்களது குடும்பத்தினரும் குரும்பைகட்டி, புலோலி தெற்கு.*

**திரு.சி.நடராஜலிங்கம்,** பிரதம முகாமையாளர், இலங்கை வங்கி, யாழ்ப்பாணம். (86469)

---

# 31 ஆம் நாள் நினைவலைகள்



## அமரர் ஆறுமுகம் மகாலிங்கம்
(பிரதேச செயலர்)

11-03-2001 அன்று சிவபதமடைந்த அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*பிரதேச செயலகம், நல்லூர்.* (86435) - கிராம அலுவலர்கள்.

---

# 16 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 26 - 04 - 1926



மறைவு 08 - 04 - 1985

## அமரர் சின்னையா மார்க்கண்டு
**திதி:- 10.04.2001**

தங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*பிரதான வீதி, சங்கானை கிழக்கு, சங்கானை.* (86466)

அன்பு மனைவி, சகோதரன், சகோதரிகள், மைத்துனர், மைத்துனிமார், மருமக்கள்.

# நெதர்லாந்து தலைநகரில் உள்ள விமான நிலையத்தில் தீ விபத்து!

## அதனால் உலக சேவைகளில் பாதிப்பு

அம்ஸ்ரடாம், ஏப். 10

நெதர்லாந்து விமான நிலையத்தில் திடீரென்று ஏற்பட்ட தீ விபத்தினால் விமானப் போக்குவரத்தில் பெரும் தடங்கல் ஏற்பட்டது.

ஐரோப்பாவின் முக்கிய விமான நிலையங்களில் ஒன்றான, அம்ஸ்ரடாம் 'சிபோல்' விமான நிலையத்தில் திடீரென்று தீச்சுவாலைகள் தோன்றின.

இதனால் தரித்து நின்ற விமானங்களில் இருந்தும் விமான நிலையக் கட்டடத்தில் இருந்தும் பயணிகளும், பணியாளர்களும் வெளியேற்றப்பட்டனர்.

பின்னர் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாகவும் —

தீ விபத்தினால் பாரிய சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றும் விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

நீண்ட தூர விமானங்கள் பலவும் தரித்துச் செல்லும் பரபரப்பான அம்ஸ்ரடாம் விமான நிலையத்தில் பணிகள் பாதிக்கப்பட்டதால் உலகின் பல பகுதிகளிலும் விமானச் சேவைகளில் தடங்கல்கள் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது (ஒ-9)

### அமெரிக்காவிடம் கோரிக்கை

அபுதாபி,, ஏப். 11

மேற்குக்கரை மற்றும் காஸா நிலப்பகுதியில் வசிக்கும் பொது மக்கள் மீது இஸ்ரேல் படையினர் மேற்கொள்ளும் தாக்குதல்களிலிருந்து, அவர்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு ஐக்கிய அரபு ராச்சியம் அமெரிக்காவை கோரியுள்ளது.

ஐக்கிய அரபு ராச்சியத்துக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க காங்கிரஸ் பிரதிநிதிகள் குழுவிடமே இந்தக் கோரிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

உலக அரங்கில்

# இந்தியர்களைக் கவர்வதற்காக ராஜீய சம்பிரதாயங்களை உதறிய அமெரிக்க அதிபர் 'புஷ்



வாஷிங்ரன் ஏப். 10

ராஜீயத்துறைச் சம்பிரதாயங்களை அலட்சியப்படுத்திவிட்டு, அமெரிக்க அதிபர் புஷ் இந்திய வெளியுறவு அமைச்சரைச் சந்தித்துப் பேசினார்.

அமெரிக்க அதிபர் மாளிகையில் உள்ள அறை ஒன்றில் அமெரிக்க அதிபரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கொண்டலிகா ரைஸ், இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சிங்குடன் நேற்று முன்தினம் பேச்சு நடத்திக்கொண்டிருந்தார்.

அப்போது அதிபர் புஷ் நேரடியாக அந்த அறைக்குச் சென்று மாளிகையின் மற்றொரு பகுதியில் உள்ள தனது அலுவலகத்துக்கு வருமாறு ஜஸ்வந் சிங்குக்கு அழைப்பு விடுத்தார்.

ராஜாங்க சம்பிரதாயங்களின் படி அதிபர் ஒருவர் அமைச்சர் தரத்தில் உள்ள ஒருவரைத் தேடிச் சென்று சந்திப்பது முரணானது.

அமெரிக்காவில் உள்ள இந்தியர்களை கவருவதற்காகவே புஷ் சம்பிரதாயங்களை மீறி இந்திய அமைச்சரைச் சந்தித்திருப்பதாகக் கருதப்படுகிறது.

# சீன விமான விபத்து தொடர்பாக மன்னிப்புக் கேட்க முடியாது

## அமெரிக்கத் துணை ஜனாதிபதி உறுதி

சீனப்போர் விமானத்துடன் நடுவானில் அமெரிக்க உளவு விமானம் மோதிய சம்பவம் தொடர்பாக சீனாவிடம் அமெரிக்கா மன்னிப்புக் கோரும் திட்டம் எதுவும் இல்லை என்று அமெரிக்க உதவி ஜனாதிபதி டிக் செனி உறுதிபடக் கூறியுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் சீனப் போர் விமானத்தின் விமானி கொல்லப்பட்டதற்கு அமெரிக்க அதிபர் புஷ் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளதாகவும் —

ஆனால் சர்வதேச வான் பரப்பில் விபத்து நடைபெற்றதால், அதற்காக மன்னிப்புக் கோருவது அமெரிக்காவால் ஏற்றுக்கொள்ள முடியாத தொன்று எனவும் —

வானொலிப் பேட்டியொன்றில் உதவி ஜனாதிபதி கூறியுள்ளார்.

கடந்த வாரம், நடைபெற்ற இந்த விபத்தையடுத்து அமெரிக்க உளவு விமானத்தை அதன் 24 பணியாளர்களுடன் தனது ஹைலான் தீவில் தடுத்து வைத்துள்ள சீன அரசு, இந்தச் சம்பவத்துக்காக அமெரிக்கா மன்னிப்புக் கோர வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறது. (ஒ-9)

# ம. தி. மு. கவின் தலைமையகத்தில் 'பிரபாகரன்'

சென்னை, ஏப். 10

தமிழகத்தின் சென்னையில் உள்ள ம. தி. மு. க தலைமையகமான தாயகத்துக்கு ம. தி மு. க. பொதுச் செயலாளர் வை. கோபால்சாமி நேற்றுமுன்தினம் தனது பேரனான பிரபாகரனுடன் வந்திருந்தார்.

அந்தச் சமயத்தில் அங்கிருந்த பத்திரிகைப் படப்பிடிப்பாளர்கள் தாத்தா வை. கோபால்சாமியையும் பேரன் பிரபாகரனையும் ஒன்றாகப் புகைப்படங்கள் எடுத்துக் குவித்துப் பரபரப்பை ஏற்படுத்தினர்.

# தமிழக அரசியலில்...

## அ. தி. மு. கவின் அறிவிப்பால் தோழமைக் கட்சிகள் அதிருப்தி

சென்னை, ஏப் 10

தமிழக சட்டசபைத் தேர்தலில், கூட்டணிக் கட்சிகளுக்கான தொகுதிகள் குறித்து பேச்சுக்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது அ. தி மு. க தான் போட்டியிடும் தொகுதிகளை அறிவித்திருப்பதற்கு தா. ம. கா, காங்கிரஸ், இடது கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகள் அதிருப்தி வெளியிட்டுள்ளன.

தோழமைக் கட்சிகளுடன் தொகுதிகள் குறித்து பேச்சு நடத்திக்கொண்டு, அ தி.மு க போட்டியிடும். 141 தொகுதிகளின் பட்டியலை ஜெயலலிதா அறிவித்திருக்கக்கூடாதென்றும், இந்த அறிவிப்பை அவர் மறுபரிசிலனை செய்ய வேண்டும் என்றும் —

இடது கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுள்ளது.

காங்கிரஸ் மற்றும் இடதுசாரித் தலைவர்கள் இது சம்பந்தமாக த மா.கா தலைவர் மூப்பனாரைச் சந்தித்து ஆலோசித்து வருகிறார்கள் (ஒ-9)

## சாதி உணர்வுகளைத் தூண்ட தி. மு. க. முயற்சிக்கவில்லை

### முதல்வர் கருணாநிதி தெரிவிப்பு

சென்னை, ஏப். 10

தி மு. க. சாதிக்கட்சிகளை அரவணைத்துச் செல்கிறதே தவிர, சாதி உணர்வுகளைத் தூண்ட அது முயற்சிக்கவில்லை.

இவ்வாறு தி மு.க. தலைவரும், தமிழக முதல்வருமான கருணாநிதி செய்தியாளர்களிடம் தெளிவுபடுத்தினார்.

மேலும் கருணாநிதி கூறுகையில், சாதிக்கட்சிகளை அரவணைத்து செல்வது, அவை தோன்ற ஊக்கமளிப்பதாகாது கல்வி, வேலைவாய்ப்புப் போன்றவற்றுக்கு சமூக அடிப்படையில் ஒதுக்கீடு உள்ளது. தேர்தலுக்கென சமூக நலனுக்கான அடிப்படை உறவுகளை கைவிட முடியாது என்றும் தெரிவித்தார்.

## தமிழகத் தேர்தல் குறித்து நாளொரு கருத்துக் கணிப்பு

எதிர்வரும் மே மாதம் தமிழகத்தில் நடைபெறவுள்ள சட்டப் பேரவைத் தேர்தல் வெற்றி வாய்ப்புகள் குறித்து பல கருத்துக் கணிப்பு முடிவுகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

தமிழகத்தில் நாளொரு கருத்துக் கணிப்பு முடிவுகள் வெளியிடப்பட்டு வருவதால். அவை வெவ்வேறு விதமான முடிவுகளைத் தெரிவிக்கின்றன.

ஆகவே கருத்துக் கணிப்புகளின் நம்பகத்தன்மை குறித்து மக்களிடையே பலத்த சந்தேகம் எழுந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

தேர்தலில் வெற்றி பெறக்கூடிய கட்சிக்கு ஆதரவளிக்கும் மனோபாவம் கணிசமான வாக்காளர்களுக்கு இருப்பதாகவும்—

அத்தகையவர்களைக் கவருவதற்காக, சில கட்சிகள் தமக்குச் சாதகமாக கருத்துக்கணிப்பு முடிவுகளை வெளியிட ஏற்பாடு செய்வதாகவும்—

அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இத்தகைய கருத்துக்கணிப்பு முடிவுகள் அதிகளவில் வெளியிடப் படுவதால், நேர்மையான கருத்துக் கணிப்புகள் பின்தள்ளப்படுவதாகக் கூறப்படுகிறது. (ஒ-6)

# லஞ்சம் மற்றும் அதிருப்தி காரணமாக காங்கிரஸ் தலைவர்கள் இருவர் கட்சிப் பதவிகளிலிருந்து விலகல்

## தேர்தல் சமயத்தில் திடீர் பின்னடைவு

புதுடில்லி, ஏப். 10

இந்திய காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்கள் இருவர் கட்சியில் தாங்கள் வகித்து வந்த பதவிகளில் இருந்து விலகியுள்ளனர். தேர்தல்கள் நெருங்கிவரும் சமயத்தில் இவர்கள் விலகியதால் காங்கிரஸுக்கு பலத்த பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

கேரள மாநில காங்கிரஸ் பிரமுகரான கே. கருணாகரனும், கர்நாடகக் காங்கிரஸின் தலைவரான வி. எஸ். கௌஜல்கியுமே பதவி விலகியவர்களாவர்

கேரள சட்ட சபைத் தேர்தலுக்கு வேட்பாளர்களைத் தெரிவு செய்வதில் நெறிமுறைகள் கடைப்பிடிக்கப்படவில்லை என்றும், இதற்கு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவரும், சட்டசபை எதிர்க்கட்சித் தலைவருமான அந்தோணியே காரணம் என்றும் கருணாகரன் குற்றஞ்சாட்டினார். அத்துடன் காங்கிரஸ் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர் பதவியிலிருந்தும் அவர் விலகினார்.

இதற்கிடையில் —

கர்நாடகக் காங்கிரஸ் கட்சித் தலைவர் வி. எஸ் கௌஜல்கி, லஞ்சம் பெறும்போது படமாக்கப்பட்ட ஒலி நாடா பகிரங்கப்படுத்தப்பட்டதால் மாநிலத் தலைவர் பதவியில் இருந்து விலகினார்.

கேரளாவின் செல்வாக்குப் பெற்ற கருணாகரன் கட்சிப் பதவியிலிருந்து விலகியதாலும் —

கர்நாடகக்காங்கிரஸ் தலைவர் கௌஜல்கி லஞ்சம் பெற்றது அம்பலமானதாலும்—குறிப்பிட்ட இரு மாநிலங்களிலும் காங்கிரஸுக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ)

# 50 நாள்களில் விளையும் புதிய ரக நெல்!

30 முதல் 50 நாள்களில் விளைந்து பயன்தரக் கூடிய உயர் விளைச்சல் தரும் நெல் ரகம் ஒன்றை. ஐ. நா. வளர்ச்சித் திட்டம் மற்றும் மேற்கு ஆபிரிக்கக் குழுமம் ஆகியவற்றின் விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

'மெரிக்கா' என்று பெயரிடப்பட்டுள்ள புதிய நெல் ரகத்தில் புரதச் சத்து அதிகமிருப்பதாகக் கூறப்படுகிறது. (ஒ)

# அகதிகளுக்கு உதவுவதில் பாகிஸ்தான் அலட்சியம்

## அமெரிக்கா குற்றச்சாட்டு

வாஷிங்ரன், ஏப். 10

ஆப்கானிஸ்தானிய அகதிகளுக்கு உதவியளிக்கும் ஒப்பந்தத்தை, பாகிஸ்தான் அலட்சியப் படுத்தி வருவதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.

ஓயாத உள்நாட்டுப் போரினாலும், அங்கு நிலவி வரும் கடும் வரட்சியினாலும் பாதிக்கப்பட்ட சுமார் 70 ஆயிரம் ஆப்கானிஸ்தானியர்கள் பாகிஸ்தானில் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர். பெஷாவரில் அமைக்கப்பட்டுள்ள அகதிமுகாமில் அவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அந்த அகதிமுகாமில் மருத்துவ உதவிகள் சரிவர வழங்கப்படுவதில்லை எனவும் —

போஷாக்கான உணவுகள் போதுமான அளவு விநியோகிக்கப்படவில்லை எனவும் —

இதனால் ஒவ்வொரு நாளும் குழந்தைகள் இறந்து வருவதாகவும் —

அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானிய அகதிகளுக்கு அவசரத் தேவைகளை வழங்குவது தொடர்பான ஒப்பந்தத்தை பாகிஸ்தான் மீறிவிட்டதாகவும் அந்த அதிகாரி குற்றஞ்சாட்டினார். (ஒ-6-9)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

உயர்பட்டப் படிப்புகள் பீடம்

ஈராண்டுப் பகுதி நேரப் பட்டப்பின் கல்வித் தகைமைக் கற்கைநெறி

2001/2003

## புதிய அனுமதி

அரசாங்கப் பாடசாலைகளில் கடமையாற்றும் பட்டதாரி ஆசிரியர்களிடமிருந்து மேற்படி கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் 2001—05—25 இல் 50 வயதுக்குக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

இக்கற்கைநெறி தொடர்பான விண்ணப்பப்படிவங்களைப் பெற விரும்புவோர் பல்கலைக்கழக நிதிக்கிளையில்/பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 50 செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டினை உயர்பட்டப் படிப்புகள் பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம் என்ற பெயரில் பெறப்பட்ட ரூபா 50 இற்கான காசுக் கட்டளை/ தபாற்கட்டளையுடன் முத்திரையொட்டப்பட்ட, சுய முகவரியிடப்பட்ட தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி
2001 - 05 - 25
ஆகும்.

எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு இரண்டினதும் பெறுபேறுகளுக்கமையத் தெரிவுகள் இடம்பெறும்.

எழுத்துத் தேர்வு
2001 - 06 - 16
அன்று நடைபெறும்.

கற்கைநெறிக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் பல்கலைக்கழகத்திலிருந்து 25 மைல் சுற்றாடலுக்குள் அமைந்துள்ள பாடசாலைக்கு இடமாற்றம் பெறுவதோடு, இக் கற்கைநெறிக்குப் பதிவு செய்யும் போது மேற்குறிப்பிட்ட இடமாற்றல் கடிதத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் யாவும் 2001 - 05 - 25 ஆம் திகதிக்கு முன்னர் உயர்பட்டப் படிப்புகள் பீடாதிபதி அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இக்குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பதிவாளர்
யாழ் பல்கலைக்கழகம்
2001 - 04 - 09

(சி/16206)


## பகுதி நேர ஆங்கில ஆசிரியருக்கு

தென்மராட்சி, ஏப். 10

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களாகக் கடமையாற்றும், அனைவரையும் நாளை புதன்கிழமை காலை 9.00 மணிக்கு நெல்லியடியில் இயங்கும் வலயக் கல்வி அலுவலகத்திற்கு வருகை தருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார்.

கல்வித் தகைமைச் சான்றிதழ் பிற தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் நியமனக் கடிதம் ஆகியவற்றைக் கொண்டு வருமாறும் அவர் தெரிவித்துள்ளார். (ம—117)

## சதாபிஷேகமும் நூல் வெளியீடும்

வலிகாமம் தெற்கு, ஏப். 10

மறுமலர்ச்சி எழுத்தாளரும் சமஸ்கிருத பண்டிதருமான பிரம்மஸ்ரீ ச. பஞ்சாட்சர சர்மா தம்பதிகளின் சதாபிஷேகப் பெருவிழாவும், நூல் வெளியீட்டு நிகழ்வும் நாளை புதன்கிழமை கொழும்பு கப்பித்தாவத்தை சிவன் கோவில் கல்யாண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

கப்பித்தாவத்தை விநாயகர் ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ எஸ். சண்முகரத்தின சர்மா தலைமையில் நடைபெறும் சதாபிஷேக விழாவில், கல்வி அதிகாரி கு. சோமசுந்தரம் பாராட்டுரை வழங்குவார். கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வர ஆலயப் பிரதமகுரு பிரம்மஸ்ரீ சி. குஞ்சிதபாதக் குருக்கள் நூல் வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

அட்சரபோதினி, மறுமலர்ச்சி கண்ட மாணிக்கம் ஆகிய இரு நூல்கள் நிகழ்வில் வெளியிடப்பட உள்ளன.

(ம-152)

## ஸ்கூட்டர் லொறி விபத்தில் சிறுவன் நசியுண்டு மரணம்!

வடமராட்சி, ஏப். 10

பருத்தித்துறை துறைமுகத்தில் இருந்து பொருள்களை ஏற்றி வந்த லொறி ஒன்றும், ஸ்கூட்டர் ஒன்றும் விபத்துக்குள்ளானதில் ஸ்கூட்டரின் பின் ஆசனத்தில் பயணம் செய்த பத்து வயதுச் சிறுவன் லொறிச் சில்லுக்குள் அகப்பட்டு நசியுண்டு மரணமானான்.

நேற்று முற்பகல் 10.30 மணியளவில் பருத்தித்துறை மெத்தைக் கடைச் சந்திப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

உடுப்பிட்டி சந்தை வீதியைச் சேர்ந்த தபேந்திரன் கார்த்தீபன் என்ற சிறுவனே விபத்தில் மரணமானான்.

சில தினங்களுக்கு முன்னர் இயந்திரம் ஒன்றினுள் கை வைத்து விரல் ஒன்று துண்டிக்கப்பட்ட இச்சிறுவன், துண்டிக்கப்பட்ட காயத்துக்கு மருந்து கட்டுவதற்கு தந்தையாருடன் ஸ்கூட்டரில் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலைக்குச் சென்றுவிட்டு, பருத்தித்துறைக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோதே விபத்தில் சிக்கியதாகக் கூறப்படுகிறது.

ஸ்கூட்டரை ஓட்டி வந்த சிறுவனின் தந்தை சிறுகாயத்துடன் உயிர் தப்பினார்.

மரணமான சிறுவனின் சடலம் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலீஸார் விசாரணைகளை நடத்தி வருகிறார்கள்.

(ஐ-173-117-109)

## சமாசம் அமைப்பு

தென்மராட்சி, ஏப். 10

தென்மராட்சி பிரதேச கிராமிய அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

பிரதேச செயலக நிர்வாக அலுவலர் செ. முருகையா தலைமையில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பிரதேசத்தில் இயங்கும் கிராமிய அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

(ம-117)


சென். ஜோன்ஸ் கல்லூரி
யாழ்ப்பாணம்

பழைய மாணவர் சங்கம்

எமது சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் 11 - 04 - 2001 புதன்கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு கல்லூரியில் நடைபெறும். நிர்வாக சபை அங்கத்தவர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்.

(சி/16211)



வாழ்த்துகின்றோம்

05 - 04 - 2001 இல் புதிதாக உதயமான

யாழ். மாவட்ட

வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவுச்சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

யாழ். மாவட்டக் கூட்டுறவு உதவி ஆணையாளர்

திரு. சண்முகநாதன் அவர்களின்

தலைமையில் நடைபெற்ற சங்க அங்குரார்ப்பண வைபவத்தில் நிர்வாக இயக்குநர்களாகத் தெரிவுசெய்யப்பட்ட

தலைவர்: திரு. மரியரெட்ணம் - யாழ்ப்பாணம்
உபதலைவர்: திரு. சிவகுருநாதன் - வடமராட்சி
செயலாளர்: திரு. சிவஞானம் - நல்லூர்

நிர்வாகசபை: திரு. பரமலிங்கம் - தென்மராட்சி
திரு. சுப்பிரமணியம் - உடுவில்
திரு. அஞ்சலோ - தீவகம்
திரு. ஜெயச்சந்திரன் - சங்கானை

ஆகியோரையும், சங்கத்தையும் நிறைந்த மனதுடன் வளர்ச்சியுற- உயர்ச்சிபெற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்

றோயல் வெதுப்பகம்
395, பிரதான வீதி,
பருத்தித்துறை.

அமுல் கிறீம் ஹவுஸ்
அன்
பேக்கரி
452, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சிற்றி வெதுப்பகம்
தும்பளை,
பருத்தித்துறை.

ருவிங்கிள் ஸ்ரார் பேக்கரி
173, கொழும்புத்துறைவீதி,
பாண்டியன் தாழ்வு,
யாழ்ப்பாணம்.

(சி/16214)

## புலிகள் மீதான தடையை ஆட்சேபித்து

# எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு லண்டன் தமிழர்கள் திட்டம்

லண்டன்,ஏப்.10

விடுதலைப் புலிகள் அமைப்பை பிரிட்டிஷ் அரசு தடை செய்ததற்கு எதிராக அங்கு வசிக்கும் தமிழர்கள் பெருமளவிலான எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளை பிரிட்டிஷ் அரசு தடை செய்தமை அங்கு வாழ்கின்ற தமிழ் மக்களைப் பெரிதும் பாதித்துள்ளது. புலிகளின் செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்களை மட்டுமன்றி அங்குள்ள சாதாரண தமிழ் மக்களைக் கூட இத்தடை பெரிதும் கவலைக்குட்படுத்தியுள்ளது.

இத்தடைக்கு எதிராகப் பெரும் எதிர்ப்பை வெளிக்காட்டப் போவதாகப் பலரும் தெரிவித்துள்ளனர்.

"எமது குடும்பத்தவர்களைப் பாதுகாப்பதற்காக பல்வேறு கஷ்டங்களின் மத்தியில் நாம் இங்கு வாழ்ந்தாலும் இது எம்மைப் பெரிதும் பாதித்துள்ளது. இது குறித்து அக்கறைப்படவும் வைத்துள்ளது" என்று லண்டனில் பல வர்த்தக நிறுவனங்களின் உரிமையாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

லண்டனில் பல பகுதிகளிலும் தமிழ்க் கடைகளில் காட்சிக்காகவும், விற்பனைக்காகவும் வைக்கப் பட்டிருந்த விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவரின் படங்கள் மற்றும் புலிகளின் இராணுவ நடவடிக்கைகள் தொடர்பான விடியோ நாடாக்களையும் தற்போது அந்தக் கடைகளில் காண முடியவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

## கைதடியில் இரு பாடசாலைகள் 23ஆம் திகதி முதல் இயங்கும்

கைதடிப் பிரதேசத்தில் மக்கள் மீளக் குடியமர்வதை அடுத்து இப்பகுதியில் உள்ள விக்னேஸ்வரா வித்தியாலயம், குருசாமி வித்தியாலயம் ஆகியவற்றை எதிர்வரும் 23 ஆம் திகதி தொடக்கம் மீள இயக்குவதற்கு கல்வி வலய அலுவலகத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப்பாடசாலைகளில் இணைந்து கல்வி பயிலவுள்ள மாணவர்கள் இரண்டாம் தவணை ஆரம்பமாவதற்கு முன்னர் தத்தமது பாடசாலை அதிபர்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் -

இப்பகுதியில் பலத்த சேதங்களுக்கு இலக்காகியுள்ள கைதடி கலைவாணி வித்தியாலயம், எருதிடல அ.த.க.பாடசாலை, கைதடி சேதுகாவலர் வித்தியாலயம் ஆகியவற்றின் மாணவர்களும், தற்போது இயங்கவுள்ள பாடசாலைகளில் இணைந்து கல்வியினைத் தொடரலாம் என்றும்-

வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

(ஐ-117)

## தங்கம்மா அப்பாக் குட்டி நிதி உதவி

வலிகாமம் தெற்கு,ஏப்.10

யாழ்ப்பாணம் கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கும் என தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தான தலைவர் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி ஐயாயிரம் ரூபா நிதியை வழங்கியுள்ளார்.

(ம-152)

## காரைநகர் கரையோரங்களில் சட்டவிரோத மண் அகழ்வு அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.10

காரைநகர் கரையோரப் பகுதிகளில் சட்டவிரோதமாக மண் அகழ்வது அண்மைக்காலமாக அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அகழ்ந்தெடுக்கப்படும் மண் தினமும் பல டிராக்டர்கள் மூலம் வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றது. தொடர்ச்சியாக மண் அகழப்பட்டு வருவதால் கரையோரப் பகுதிகள் விரைவில் கடலில் மூழ்கும் ஆபத்து ஏற்பட்டுள்ள தாக அப்பகுதி மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

(ம)

## கிரிக்கெட் மத்தியஸ்தர் தெரிவுப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஏப்.10

யாழ்.கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கத்தில் புதிய மத்தியஸ்தர்களை இணைக்கும் நோக்குடன் வருடாந்தம் நடத்தப்படும் தெரிவுப் பரீட்சை எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கின்றது.

தெரிவுப் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் கிரிக்கெட் ஆர்வலர்கள் விண்ணப்பப் படிவங்களை 'அருண்ஸ்' இல 347, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரியில், பரீட்சைக் கட்டணமான ரூ. 100 இனைச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம் என்று சங்கத்தின் செயலாளர் எஸ்.சிறகாந்தன் அறிவித்துள்ளார். விண்ணப்ப முடிவு திகதி நாளை புதன் கிழமையாகும்.

(ம)

## நல்லூரில் நாளை விநாயகர் பிரதிஷ்டை

நல்லூர்,ஏப்.10

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் உட்பிரகாரத்தின் மேற்குப் பகுதியில் விநாயகரும் பள்ளி அறை மூர்த்திகளும் நாளை காலை எட்டு மணிக்குப் பிரதிஷ்டை செய்யப்படவுள்ளனர்.

அதனை ஒட்டி விசேட அபிஷேகங்களும், பூஜைகளும் நடைபெறும்.

புதிய கற்பக்கிருகங்கள் இரண்டினதும் மேற்கூரைகள் தங்க ஒளி வீசும் உலோகச் சேர்க்கையினால் அழகிய வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டுள்ளன.

(அ-3)


**எக்கணமியின் பிரமிட் & பைவ் ஸ்ரார் வீடியோ CD வெளியீடு**

✪ மின்னலே ✪ எங்களுக்கும் காலம்வரும் ✪ விவேக் காமடி VOL.8,9

**புதிய ஓடியோ CD**

✻ சிற்றிசன்

**பக்திப்பாடல் ஓடியோ CD**

- கந்தர் சஷ்டி கவசம் - S.ஜானகி
- ஸ்ரீ வீர ஆஞ்சநேயா - வீரமணிதாஸன்
- ஐங்கரன் பக்திப் பாடல்கள் - வீரமணிதாஸன்
- அம்மன் பக்திப் பாடல்கள் - புஸ்பவனம் குப்புசாமி ,வீரமணிதாஸன்
- ஸ்ரீ வெங்கடேசம, ஸ்ரீ சிறினிவாசம் - கிருஸ்ணகுமார்
- பழனிக்குச் செல்வோம் - பரவை முனியம்மா
- மஞ்சள் குங்குமம் - வீரமணிதாஸன்
- சக்தியுள்ள முனீஸ்வரா - தீபன் சக்கரவர்த்தி
- ஸ்ரீ விஜய மாருதி பகவான் (உ.ஹுசிங்கம்) - M.காசி

இளைய தலைமுறையின் உன்னத இசைப் பதிவகம்

**வீடியோ எக்கணமி மியூசிக் கோணர்**

297, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி.

கிளைகள்: ✻மாக்கற் - சங்கானை, ✻நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்

(86500)



**இலவசம்! இலவசம்!! இலவசம்!!!**

வெளிநாடுகளிலுள்ள உங்கள் உறவினர்களுக்கு புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிக்க விரும்பும் வாடிக்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தி

உங்கள் வாழ்த்துக்களை E-Mail மூலம் இலவசமாக அனுப்பி வைக்க எம்மை நாடுங்கள்



**SRI MURUGAN**

**TELE COMMUNICATION & AGENCY POST OFFICE**

**303, K.K.S. Road, Jaffna**

**E-MAIL - DEL - Smskr@Eureka.lk**

**T.P.021-2670, 3588, FAX-3214**



குறிப்பு:- உங்கள் வாழ்த்துக்களை எதிர்வரும் 13.04.2001 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும்.

(C/16218)


## மரண அறிவித்தல்கள்

### கந்தையா கனகசபை

(முன்னாள் லலிதா ஜுவலறி கணக்காளர்)

வேலணை 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 402,கோவில் வீதி, நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா கனகசபை (8.04.2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா நாகரட்ணம் (நாகபிள்ளை) தம்பதிகளின் ஏகபுத்திரனும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி இராசலெட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் கமலாசினிதேவியின் பாசமிகு கணவரும், ஜெயசீலனின் (ஜேர்மனி) அருமைத் தந்தையும் காலஞ்சென்றவர்களான பத்மாசினி, மங்கையர்க்கரசி திலகவதி மற்றும் புனிதவதியின் அன்புச் சகோதரரும், பாலகிருஷ்ணபிள்ளையின் சகலனும் சரோ ஜினிதேவியின் பாசமிகு மைத்துனரும், பாலகுமார் (ஜேர்மனி), பாலவதனி ஆகியோரின் பெரிய தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (09.04.2001) திங்கட்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*402, கோயில் வீதி, நல்லூர்.*

தகவல்:- க.கமலாசினிதேவி (மனைவி)

(86490)

### கதிரவேலு வேலாயுதம்

புங்குடுதீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு வேலாயுதம் நேற்று 09-04-2001 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் பார்வதியின் அன்புக் கணவரும் தேசிங்கராசா (ஜேர்மனி), தவமணிதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், வானதி (ஜேர்மனி), சண்முகலிங்கம் (வர்த்தகர் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பாகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*315/2 ,7ஆம் ஒழுங்கை, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, யாழ்ப்பாணம்.*

தகவல்:- க.சண்முகலிங்கம்

(86498)

### தவேந்திரன் கார்த்தீபன்

சந்தை வீதி, உடுப்பிட்டியைச் சேர்ந்த தவேந்திரன் கார்த்தீபன் நேற்று (09.03.2001) திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் தவேந்திரன் - கமலேஸ்வரியின் அன்புப் புதல்வனும் நல்லூரைச் சேர்ந்த கு.கனகரட்ணம் மங்கையர்க்கரசி அருணாசலம் நாகேஸ்வரியின் பேரனும் தபேஸ்வரி, காயத்திரி, ரகுராம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், யோகரட்ணம் பாரதிதேவியின் மருமகனும் , தேவரஞ்சன், வரதன் (குட்டி), சுதர்சன் ஆகியோரின் பெறாமகனும், சாரதா, சுபத்திரா ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2001) செவ்வாய் காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வல்லை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.

*சந்தை வீதி, உடுப்பிட்டி.*

தகவல்:- அ.தவேந்திரன் (சோக்கர் - தகப்பன்)

(86499)


**புத்தம் புதிய புடைவை வகைகளை மலிவு விலையில் பெற்றிட நாடவேண்டிய ஸ்தாபனம்**

**வாணி ரெக்ஸ்**

தீப ஒளிவீச ஆடைகளின் சாம்ராஜ்யம் ஒன்று உங்களை வரவேற்கின்றது அது

**வாணி ரெக்ஸ்**

தென்மராட்சியில் தனக்கென்றொரு தனி முத்திரையில் ஒளிர்ந்தவள் தற்போது யாழ்நகரில் உதயமாகியுள்ளாள்.

புது வருடத்தை முன்னிட்டு சகல விதமான புடைவை வகைகளையும் மலிவு விலையில் பெற்றிட

**வாணி ரெக்ஸ்**

நாளுக்கு நாள் மாறுகின்ற ஆடைத் தெரிவுகள் உடனுக்குடன் எம்மை வந்தடைகின்றன.

இருளகன்று ஒளி பிறக்க ஒளிரும் ஆடைத் தெரிவுகளுக்கு

வாணி ரெக்ஸ்

இல.81, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

# இரு தரப்புடனும் தொடர்ந்து பேசி புரிந்துணர்வு காண வேண்டியுள்ளது

## நோர்வே தூதரகம் அறிக்கை

கொழும்பு,ஏப்.10

நேரடிப் பேச்சுக்கு முன்னர் இலங்கை அரசுடனும், விடுதலைப் புலிகளுடனும் தொடர்ந்து கலந்துரையாடி பரஸ்பர, புரிந்துணர்வு நிலையை ஏற்படுத்த வேண்டி இருப்பதாக கொழும்பில் உள்ள நோர்வே தூதரகம் தெரிவித்துள்ளது.

வன்னியில் -

விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடன் நோர்வே தூதர் நடத்திய பேச்சுக்களை அடுத்து விடுக்கப்பட்ட செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இருதரப்புக்கும் இடையில் புரிந்துணர்வைக் கொண்டு வருவதற்காக முன்னெடுத்துள்ள முயற்சிகளில் ஓர் அங்கமாக வன்னியில் மேற்கொண்ட பேச்சுக்களின் போது பல வினாக்களையும் சந்தேகங்களையும் புலிகள் எழுப்பினர். பலவிடயங்கள் குறித்து தெளிவுபடுத்தப்பட்டது. அக்கறையுள்ள பல விடயங்கள் குறித்து இன்னமும் தெளிவுபடுத்த வேண்டியுள்ளது.

சாதகமான மாற்று யோசனைகள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.

சமாதானத்துக்காக ஒஸ்லோ முன்னெடுத்துள்ள முயற்சிகள் இரு தரப்புக்களுடனும் தொடரும். விடுதலைப் புலிகள் முன்வைத்த சில விடயங்கள் தொடர்பாக புலிகளுடனும் அரசுடனும் கலந்துரையாட வேண்டியுள்ளது - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இந்த அறிக்கையின் சில பகுதிகள் நேற்றைய உதயனில் வெளியாகியிருந்தன) (ஐ-3)

## தம்மீதான தடையை நீக்குமாறு

# புலிகள் தரப்பினர் விடுத்த கோரிக்கை நியாயமானதே!

### ஆனந்தசங்கரி கூறுகிறார்

கொழும்பு,ஏப்.10

விடுதலைப் புலிகள் தமது அமைப்பின் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு கோருவது நியாயமான கோரிக்கையாகும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப - தலைவர் வீ. ஆனந்தசங்கரி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் பேச்சுக்களை சமநிலையில் இருந்து நடத்தவே விரும்புகிறார்கள். அரசாங்கம் உயர்ந்த நிலையிலும் தாம் கீழான நிலையிலும் இருந்து பேச அவர்கள் விரும்பவில்லை.

எனவே புலிகள் முன்வைத்துள்ள யோசனை யதார்த்தமானதும் நியாயமானதும் ஆகும். இந்த யோசனைகளை புலிகள் முன்வைத் தமைக்கு அரசாங்கமே காரணம்.

சமாதான முயற்சிக்காகப் புலிகள் நல்லெண்ணமாக அறிவித்த யுத்த நிறுத்தத்தை அரசு உதாசீனம் செய்தது. வெளிநாடுகளுக்குச் சென்று புலிகளைத் தடைசெய்யுமாறு கோரியது.

இதனாலேயே புலிகள் தமது அமைப்பு மீதான தடையை நீக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர் - என்று ஆனந்த சங்கரி மேலும் கூறினார். (ஐ-3-6)

## இரு பெண்களும் பிணை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெக்டர் சுரவீர மற்றும் ராஜா, விமல் ஆகிய பொலீஸாரையும் மற்றும் கடற்படைச் சிப்பாய் ஒருவரையும் கைது செய்து எதிர்வரும் 23 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும்படி நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

சம்பந்தப்பட்ட இரு பெண்களுக்கும் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு உள்ளது என்றும் -

எனவே இருவரையும் தொடர்ந்து தடுப்புக்காவலில் வைக்கவேண்டும் என்றும் - பொலீஸ் தரப்பில் கோரப்பட்டது.

பயங்கரவாதச் சம்பவங்களுடன் தமக்குத் தொடர்பு உள்ளதாக இரு பெண்களும் கையெழுத்திட்டு அளித்த வாக்கு மூலத்தின் பிரதிகளையும் பொலீஸார் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தனர்.

பாதிக்கப்பட்ட பெண்கள் சார்பில் ஆஜரான மனித உரிமைகளுக்கும் முன்னேற்றத்துக்குமான நிலையத்தைச் சேர்ந்த சட்டத்தரணிகளான கே.எஸ்.இரத்தினவேல், எம்.றெமேடியஸ் ஆகியோரின் வாதத்தை அடுத்து, இரு பெண்களும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

ஒன்றுவிட்ட ஒரு ஞாயிற்றுக்கிழமை மன்னார் பொலீஸ் நிலையத்தில் கையெழுத்திடவேண்டும் என்று பெண்களுக்கு உத்தரவிட்ட நீதிபதி, நீதிமன்ற அனுமதி இன்றி மன்னார் மாவட்டத்தை விட்டு வெளியில் செலலக் கூடாது என்றும் அவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கினார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சகல படையினரையும் அடையாள அணிவகுப்பில் நிறுத்த வேண்டும் என்று சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்தனர். (ஐ-3-6)

## மட்டு நகரில் தேடுதல்

மட்டக்களப்பு,ஏப்.10

மட்டக்களப்பு நகரப் பகுதியும் அதனை அண்டிய பகுதிகளும் நேற்றுப் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

வீடு வீடாகச் சென்ற படையினர் கடும் சோதனைகளை மேற்கொண்டனர் எவரும் கைது செய்யப்படவில்லை.

இதேவேளை -

நகரில் உள்ள சோதனை நிலையங்களைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளில் படையினர் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

"கொங்கிறீட்" மூலம் பலமான பதுங்கு குழிகளும் அமைக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் புதிய சோதனை நிலையங்களும் அமைக்கப்படுகின்றன. (ஐ-3-21)

## மட்டக்களப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்தம்பிதமடைந்தன வீதிகளில் பொது மக்களின் நடமாட்டமும் வெகுவாகக் குறைந்து காணப்பட்டது.

இந்த ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்து வந்தாறு மூலையில் உள்ள கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று விரிவுரைகளுக்குச் செல்லாததை அடுத்து பல்கலைக்கழக செயற்பாடுகளும் ஸ்தம்பித்தன. (ஐ-6)

## இ.தொ.கா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர்களான பேரியல் அஷ்ரப், ரவூப் ஹக்கீம் உட்பட முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி.க்கள் இந்தப் பேச்சில் பங்குபற்ற உள்ளனர்.

மலையக இளைஞர்கள் கைது, பிரதி அமைச்சர் பதவி ஆகியன குறித்து தமது கட்சி முன்வைத்த யோசனைகளை அரசு நிறைவேற்றாமல் இழுத்தடித்து வருவது குறித்து இன்றைய பேச்சின் போது இ.தொ.கா. பிரதிநிதிகள் ஜனாதிபதியுடன் விவாதிப்பர் என்று தெரிவிக்கப்பட்டது.

## பல்கலை மாணவர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காட்டுமிராண்டித்தனமான செயலைப் புரிந்தவர்களை நீதியின் முன் நிறுத்தித் தண்டிக்குமாறு அரசிடம் கோரியும்-

இது விடயத்தில் மன்னார் பிரஜைகள் குழு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித்தும் -

யாழ். பல்கலைக்கழக மன்னார் மாவட்ட மாணவர் ஒன்றியம் நேற்று அறிக்கை ஒன்றையும் வெளியிட்டது.

இதே வேளை -

மன்னார் சம்பவத்தைக் கண்டிக்கும் வகையில் வடக்கு - கிழக்கு பாடசாலைகளின் மாணவர்களும், ஆசிரியர்கள், அதிபர்கள் ஆகியோரும் இன்று கறுப்புப் பட்டி அணிந்து அன்றாடக் கடமைகளில் ஈடுபட உள்ளனர்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் இந்தக் கறுப்புப் பட்டிப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது. (ஐ-6-10)

## அமைச்சர்கள், எம்.பிக்களுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிருப்பதாகவும் -

சில அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பல லட்சம் ரூபா பெறுமதியான நன் கொடைகளை வழங்கி, தமது திட்டத்தை நிறைவேற்ற அவர்கள் முயற்சித்துள்ளதாகவும் -

புலனாய்வு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

வரவு செலவுத் திட்டம் மீதான மீதான வாக்கெடுப்பை நாளை புதன் கிழமை நாடாளுமன்றத்தில் எதிர் கொள்ளவுள்ள நிலையில் இந்தச் சதித்திட்டம் குறித்த அறிவிப்பு வெளியாகி இருப்பது அரசுக்கு நெருக்கடியான ஒரு நிலையை ஏற்படுத்தி இருப்பதாக செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

வாக்கெடுப்பின் போது ஆளும் கூட்டணி அரசு தனது கூட்டணிக் கட்சிகளின் ஆதரவை உறுதி செய்து கொள்ள வேண்டிய கட்டத்தில் இருக்கிறது.

இந்நிலையில் செல்வாக்கு மிக்க வர்த்தகத் துறையினர் அமைச்சர்களையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும் விலைக்கு வாங்கி அரசை ஆட்டம்காணச் செய்ய முயற்ச்சிப்பதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

நாடாளுமன்றத்தில் குறைந்த பெரும்பான்மையைக் கொண்டுள்ள அரசுக்கு இது சிக்கலை ஏற்படுத்தலாம்.

அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணைக்கு எதிராக எதிர்க் கட்சியான ஐ.தே.க. கடந்த வியாழனன்று முதல் முறையாக வாக்களித்ததன் மூலம் அரசுக்குப் புதிய நெருக்கடியை ஏற்படுத்தி இருக்கிறது.

நாடாளுமன்றத்தில் உள்ள சிறிய பெரும்பான்மை மூலம் அவசரகாலச் சட்டத்தை அரசு நிறைவேற்றினாலும் கூட எதிர்க்கட்சி எடுத்துள்ள இந்த நகர்வு நாடாளுமன்றத்தில் ஆளும் தரப்புக்கு சோதனையான காலம் நெருங்குவதன் அறிகுறியாகவே கொள்ளப்படுகிறது என்றும் அந்தச் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (ஐ)

## புலிகளின் தடை நீக்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாவது செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டது.

தம்மீது விதிக்கப்பட்ட தடையை நீக்கவேண்டும் என்ற புலிகளின் கோரிக்கை ஒரு தந்திரமான விவகாரம் - என்று வெளியுறவு அமைச்சருக்கு நெருங்கிய ஆனால் தமது பெயரைக் குறிப்பிடவேண்டாம் எனக் கேட்டுக் கொண்ட உயர் அதிகாரி கோரினார்.

புலிகளின் கோரிக்கையை ஏற்றுக கொள்வதன் சாதக பாதகங்களை ஆராய்ந்து தமக்குத் தக்க சிபார்சினை செய்யுமாறும் -

புலிகளின் கோரிக்கைக்கு மாற்றீடாகக் கையாளக்கூடிய நடவடிக்கைகள் யாவை என்பன குறித்தும் தமக்கு ஆலோசனை வழங்குமாறும் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசியல் நிபுணர்கள், ஆலோசகர்கள் கொண்ட குழுவிடம் கேட்டிருப்பதாகவும் அதே உயர் அதிகாரி தகவல் தெரிவித்தார்.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் கோரிக்கை நியாயமானது என்ற நிலைப்பாட்டை தமிழ்க் கட்சிகள் எடுத்துள்ளதும் அவர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாவிடில் பேச்சுவார்த்தை முறிவடையும் என்றும் அவை உறுதிபடக் கூறியிருப்பதும் அரசாங்கத்துக்கு ஒரு வகையான அழுத்தமாக அமையும் என்று அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, வன்னி சென்று விடுதலைப் புலிகளுடன் 'மரதன்' பேச்சுக்களை நடத்திய நோர்வே நாட்டுத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் தமது பேச்சுக்களின் விவரத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் அமைச்சர் லஷ்மன் கதிர்காமருக்கும் தெரிவித்தார்.

சனிக்கிழமை மாலை கொழும்பு திரும்பிய நோர்வேத் தூதுவர் ஞாயிறன்று ஜனாதிபதியைச் சந்தித்து பேச்சுவார்த்தை விவரத்தை அறிவித்தார்.

இதேவேளை - நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல் ஹெய்ம் இப்போதைக்கு - உடனடியாக - இலங்கைக்கு வரமாட்டார் என்றும் அதற்கான ஏற்பாடுகள் எதுவும் செய்யப்படவில்லை என்றும் நோர்வேத் தூதரக வட்டாரங்கள் கூறின. (ஐ)


விற்பனைக்கு உண்டு

❊ கொம்பியூட்டர் செற் (PENTIUM III)
❊ டிஸ் அன்ரனா (டியிற்றல் றிசீவர்)
❊ போட்டோஸ்ரெற் மிசின் (கனோன்)
❊ லெமனேற்றிங் மிசின் FAX மிசின்
❊ கோட்லஸ் ரெலிபோன் Shanyo,Sony

சகலவிதமான பற்றரி வகைகள்
❊ டோச்லைற் பற்றரி ❊ பென்டோச் பற்றரி
❊ மீடியம் பற்றரி ❊ 9V பற்றரி
❊ AAA (Energizer) சிங்கப்பூர் பற்றரி

நாடவேண்டிய இடம்:
செல்வம் ஸ்ரோர்ஸ்,
380, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(C/16197)

NEW SCIENCE COLLEGE
Physics
இ.குகன் (B.Sc.)
மின்காந்தத் தூண்டல்
A/L 2001 & 2002
ஆரம்பம்:- நாளை 11.04.2001
புதன், வியாழன் நேரம்:5-6
(86480)

விற்பனையாகிறது !
நவீன நிதிக்கணக்கீட்டுக் கோட்பாடுகள்
வெளியீடு D.M.I





ஆசிரியர் D.Sam

கிடைக்கும் இடங்கள்:-
(1) பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம், கொழும்பு -6, 11
(2) சிறிலங்கா புத்தகசாலை - யாழ்ப்பாணம்.
(3) D.M.I - யாழ்ப்பாணம்.
(4) PITRABAN - CO - 11
(C/16210)

இன்று தமது முதலாம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும்
சிங்கப்பூர் ஜூவலறி
ஸ்தாபனத்தார், தங்களின்
வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும்
தங்களின் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறார்கள்.
நவீன அழகிய சிங்கப்பூர் நகைகளுக்கு
சிங்கப்பூர் ஜூவலறி
இல:93, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(86491)

நாளுக்கு நாள் அறிமுகமாகி வரும் புடைவை நாகரிகத்தினை
உடனுக்குடன் யாழ்நகரில் அறிமுகமாக்கிட...
பெண்களுக்கான/ஆண்களுக்கான
தனித்தனி காட்சி அறைகளில்.
✶ வெளிநாட்டு ஆடைகள், சல்வார் கமிஸ்.
✶ சேட்டிங்ஸ், சூட்டிங்ஸ், ஹைற்ஸ்கேட், பிளவ்ஸ்,
ஹைற் T சேட்
வகைகளைத் தரமான, மலிவான விலையில்
பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.





ஹெஸ் பொயின்ற் அன் சுஜானாஸ்
இல.23,24A, நவீன சந்தை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(C/16180)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.04.2001 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.